# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2 | ...பிற 23-7-39 பிரமாதி௵ ஆடி௴ 8உ | முத்து 17

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| அயல் நாட்டில் இந்தியர்க... | | 512 |
| குறிப்பு | | 514 |
| தென்றல் காற்று | | 516 |
| வார நடப்பு | | 519 |
| இளமை | ராஜப்பா | 520 |
| சம்பிரதாய க்ஷீணம் | ஸ்ரீ வி. வி. சிந்தாமணி | 521 |
| காலத்தின் கோலம் | ஸ்ரீ டி. எஸ். ரமணி | 525 |
| "போலிஷ் காரிடார்" | ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி | 527 |
| மோதிரமும் பேசிரியும் | ஸ்ரீ வி. ஆர். சுந்தரராமன், எம். ஏ. | 531 |
| சிறுவர் பகுதி | "கேஸரி" | 535 |
| புத்தக விமர்சனம் | | 538 |
| வலை வீச்சு | | 539 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதை...
எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவ...



# அயல் நாட்டில் இந்தியர்கள்

அந்நிய நாட்டில் குடியேறி யிருக்கும் இந்தியர்கள் படும் கஷ்டம் நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது. பர்மாவில் நம் தேசத்தார்கள் சில காலமாக மிகவும் வருந்துகிறார்கள். அநேக இடங்களில் சரிவர பாதுகாப்பில்லாமல் பற்பலர்கள் சொத்தையும் உயிரையும் இழந்துவிட்டார்கள். தென் ஆப்ரிகாவில், ஏற்கெனவே ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கு விரோதமாய் யூனியன் சர்க்கார் அநேக காரியங்களைச் செய்துவந்து கடைசியில் இந்தியர்களுக்கு மிகவும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தக்கூடிய புதிய மசோதா ஒன்று கொண்டுவந்திருக்கிறார்கள். அது நிறைவேறும் பக்ஷத்தில் அத்தேசத்தில் குடியிருக்கும் ஆயிரக்கணக்கான இந்தியர்களின் சொத்தும் சுதந்திரமும் அழிந்துவிடும். இதெல்லாம் முன்னிட்டு அவர்கள் ஸத்யாக்கிரகம் துவக்குவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். நம் தேசத்துக்கு அருகிலிருப்பதும் நம் நாட்டு ஜனங்கள் போய் ஏராளமாய் குடியேறியிருக்கும் இலங்கைத்தீவிலும் நெருக்கடியான நிலைமை சம்பவித் திருக்கிறது.

இலங்கையில் இந்தியர்கள் ஸ்திதியும் செய்கையும் சற்று விவரமாய் ஆராய்ச்சி செய்யத்தக்கது. இலங்கை நிலங்களுக்கும் தோட்டங்களுக்கும் சாகுபடிக்கு சரிவர ஆள்களில்லாமல், வெகுகாலமாக ஈனக் கூடலிக்கு இந்தியர்கள் சென்று குடியேறி இருக்கிறார்கள். அந்த இந்தியர்களின் வேலையினாலும், சரீரப் பிரயாசையினாலும்தான், இலங்கையின் மலைப்பிரதேசங்களிலும், தோட்டங்[...]லும் சாகுபடி செய்யப்ப[...] சொத்தும், [...]திகரித்திருக் [...]று குடியேறியிருக்கும் இந்திய[...] மிகவும் படித்தவர்கள் அல்ல. சீமா[...] அல்ல. அன்றாடம் வேலைசெய்து, [...]து வரும் கூலி வேலைக்காரர்க[...]ர்கள் வெகு வருஷமாக தங்கள் ஊ[...] [...]ாட்டையும் விட்டு இலங்கையி[...] வசித்து வருகிறார்கள். அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வரும்பக்ஷத்தில் பந்துவர்க்கம் இல்லாமலும், பிழைப்பில்லாமலும், சொத்து வீடுகள் இல்லாமலும் தவிக்கவேண்டும்.

இந்த நிலைமையில் இலங்கை மந்திரிகள் அவர்களைத் திரும்ப இந்தியாவுக்கு அனுப்பிவிட உத்தேசித்திருப்பது மிகவும் நியாய விரோதம். இலங்கையிலுள்ள ஜனங்களுக்கு சரிவர வேலையகப்படவில்லை. அதை நிவர்த்திக்க இந்திய கூலி வேலைக்காரர்களை வெளியேற்றிவிட வேண்டுமென்றும், இலங்கை மந்திரிகள் சொல்லும் காரணங்களும் சரியல்ல. அத் தீவிலுள்ள நியாயமுள்ள சில கனவான்கள் மந்திரிகள் ஏற்பாட்டைக் கண்டனம்செய்து பேசியிருக்கிறார்கள். கனம் ஸ்ரீ ஏ. மஹாதேவர் என்பவர் இலங்கை சட்டசபையில் ஏற்பட்ட விவாதத்தில் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிக்குமாறு, "இந்தியர்கள் தீவுக்கு வருவதைக் குறைத்தால்போதும். வந்தவர்களை வெளியேற்றவேண்டியதில்லை" என்று கூறியிருக்கிறார். நியூன்ஹேம் என்னும் ஒரு துரை அவர்கள் அதேமாதிரி இலங்கை சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கச்செய்யும் காரியம் நலம் என்று ஒப்புக்கொண்டும், ஆனால் இந்தியர்களை வெளியேற்றுவது மிகவும் எதிர்பாராததும் அக்கிரமும் ஆகும் என்றும் கூறியிருக்கிறார்.

## அயல் நாட்டில் இந்தியர்கள்

இலங்கைக்கும் நம் நாட்டுக்கும் உள்ள உறவு சமீபத்தில் ஏற்பட்டதல்ல. வெகு நீண்டகாலமாக உள்ளது. சுமார் 2500 வருஷத்துக்குமுன் பௌத்தநெறி இந்தியாவிலிருந்து கடல்தாண்டி இலங்கைத் தீவுக்குச் சென்று ஜனங்களை உயிர்ப்பித்தது. அதுமுதல் இலங்கைக்கும் நம் நாடுகளுக்கும் பரஸ்பர விசுவாசமும், ஒத்தாசையும் உண்டு. இலங்கை மன்னர்களை நம்நாட்டு அரசர்கள் கௌரவத்துடன் நடத்திவந்தார்கள். இலங்கை வாசிகள் பழைய நாளில் நம் தென்னாட்டில் பேர் பெற்ற காஞ்சீபுரம், நாகார்ஜுனகுண்டம், நாகப்பட்டினம் முதலிய ஸ்தானங்களில் கோவில்கள் முதலியன கட்டி கலைகள், சாஸ்திரங்கள் பயின்றும் வசித்து வந்தார்கள்.

இலங்கை மந்திரிகளிடம் நியாயத்தை எடுத்துச்சொல்லி, இந்தியர்கள் நிலைமையை ஒழுங்குபடுத்த நம் தேசாபிமானிகளில் முதன்மையான பண்டித ஜவஹர்லால்நேரு தூது அனுப்பபட்டிருக்கிறார். அவர் ஞானமும் கல்வியும் ஒப்பற்றது. அவர் மாசில்லாத தர்மபுத்தியுள்ளவர். அவரைவிட பெரும் ராஜ தந்திரி நமக்கு யாரும்கிடையாது. அவருக்குள்ள தைரியமும் மனோபலமும் நிகரற்றது. அவர் நம் இந்தியர்களின் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் ஸ்தாபித்து இலங்கை சர்க்காரை நியாயவழிக்குத் திருப்புவார் என்பதில் ஐயமே கிடையாது.

அவர் 17-ம் தேதி இலங்கையில் சென்று இறங்கினதும் அடியில் கண்டவாறு பேசினார்: ''நான் ஒரு இந்தியன். நான் ஒரு இந்தியரும் அவமானத்திற்குள்ளாகி இருக்கப் பார்க்கமாட்டேன்... ..............இலங்கை மற்ற அந்நிய நாடுகளைவிட இந்தியாவுடன் நெருங்கிய சம்பந்தம் உடையது. இவைகள் ஆயிரக்கணக்கான வருஷங்களாயிருக்கின்றன........இதை அந்நியர்கள் கெடுக்க முயன்றாலும், ஆயிரக்கணக்கான வருஷங்களின் பலமே அவர்களைத் தவிழ்த்துவிடும்.''

பண்டித ஜவஹர்லால் நேருவின் முயற்சிகள் கைகூடி நம் இந்தியர்களுக்கு இலங்கையில் நல்ல வாழ்வும் சுதந்திரமும் சித்திக்கும் என்று நம்புகிறோம்.

### கட்டுரையாளருக்கு

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நமக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

குறிப்பு

# ஹைதராபாத் அரசியல் திட்டங்கள்

ஹைதராபாத் சமஸ்தானத்தில் சமீபத்தில் பெருத்த அரசியல் திருத்தங்கள் ஏற்படுமென்று 'அமிர்த பஜார்' பத்திரிகையின் ஸிம்லா நிருபர் கூறுகிறார். 86 மெம்பர்கள அடங்கிய சட்டசபை ஒன்று நியமிக்கப்படும். அதில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் மெஜாரிடியாயிருக்கும் சபைக்கு, சமஸ்தான வருஷாந்திர வரவு செலவு திட்டத்தைத் தீர்மானிக்கவும், வாக்குறுதி கொடுக்கவும் பாத்தியம் உண்டு. அந்தச் சபைக்கு "மஜிலிஸ் முக்கன்னு" என்று பெயர் விளங்கும். முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி கிடையாது. ஹிந்துக்களுடன் சேர்ந்தே வாக்குறுதி கொடுக்கும்படி நியமிக்கப்படும். தவிர சமீபத்தில் மத விஷயமாய் இந்துக்கள் செய்யும் புகார்களை விசாரித்து ஒழுங்கு செய்ய ஒரு சட்டக் கமிட்டியும் ஏற்படுத்தப்படும் என்றும் தெரிகிறது. சமஸ்தானங்களில் மிகப் பெரிதும் ஐசுவரியம் வாய்ந்ததுமாக உள்ளது ஹைதராபாத் சமஸ்தானம். அதில் பிரஜா உரிமை கொடுக்க அரசியல் திருத்தங்கள் அளிக்கப்படும் பக்ஷத்தில் அது நாடு எங்கும் சந்தோஷம் கொடுக்கத்தக்கதாகும். சமஸ்தான அதிபதிகள், தங்கள் சமஸ்தானங்களில் யாதொரு புரட்சியும் கலகமுமில்லாமல், ஜனங்கள் விரும்புமாறு பொறுப்பாட்சியை அளிக்கும் பக்ஷத்தில், அது மிகவும் நலமாகும் என்று மகாத்மா காந்தி அவர்கள் கூறிவருகிறார். ஹைதராபாத் ஸமஸ்தானத்தில் அந்தமாதிரி நிறைவேறும் பக்ஷதில் அது மிக்க நலமும் கீர்த்தியையும் கொடுக்கும் என்பதற்கு சந்தேகமில்லை.

## இங்கிலாந்தும் ஜப்பானும்

பிரிட்டனுக்கு சீனதேசத்தில் பெருத்த வியாபாரமும், துறைமுகங்களும், வியாபார ஸ்தலங்களும் உண்டு. ஜப்பான் இதுவரையிலும் சீனவில் செய்துவரும் போரில், பிரிட்டனுக்குச் சொந்தமான ஸதலங்களில் தீங்கு செய்யாமல், ஒதுங்கி வந்தார்கள். கொஞ்சகாலமாக ஜப்பானியர் நடவடிக்கை மாறியிருக்கிறது. முக்கியமாய் பிரிட்டன் வசமிருக்கிற டீன்ட்ஸின் என்னும் ஓர் ஊரில் உள்ள ஆங்கிலேயர்களுக்கு ஹிம்சையையும் கௌரவததைக் குறைக்கக்கூ[illegible] காரியங்களையும் செய்து வருகிறார்கள். ஜப்பானியர்கள் மேற்படி ஊரிலிருந்து வெளியேறும் வாசிகளை சரீரப் பரீக்ஷை செய்தும், சட்டை நிஜார் முதலியவற்றைக் கழற்றி நிற்கவைத்தும், அவ்வூரின் அருகில் வெடி குண்டுகள் போட்டும், பலாத்காரமான காரியங்கள் செய்கிறார்கள்.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் ராஜ தந்திர மூலமாக பலமுறை [illegible]க்ஷபித்தும், கடைசியில் ஜப்பான் வெளி[illegible]டு மந்தி[illegible]டன் சம்பாஷணை செய்து தகரா[illegible]த் தீர்க்க தங்கள் ராஜ தந்திரியை அனுப்பியிருக்கிறார்கள். இந்த மாதிரி சம்பவங்கள் பிரிட்டனுக்கு மிகவும் வருத்தத்தையம் கலக்கத்தையும் கொடுப்பது என்பது திண்ணம். ஜப்பான் செய்கை ஸ்வேச்சையாக் ஏற்படவில்லை என்று பத்திரிகைகளும், அரசியல் நிருபர்களும் கூறுகிறார்கள். ஜெர்மெனியன் தூண்டுதலின் பேரில், ஜப்பான், பிரிட்டனும் பிரான்ஸும் கலக்கமடையும் பொருட்டும், தாங்கள் செய்து வரும் சீன யுத்தத்தில் சீனவுக்கு எவ்வித உதவியுமில்லாமல் அற்றுப்போகும் பொருட்டும், இம்மாதிரி ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

## ராஜீயக் கைதிகள்

வங்காளத்தில் அலிபூர் சிறையில் ராஜீயக் கைதிகள், தாங்கள் விடுதலைபெற வெளியிட்ட தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் கவனிக்காமல் இருந்ததால், உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தார்கள். இது மிகவும் தீவிரமான செய்கைதான். காந்திஜி அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று பலமுறை சொல்லி இருக்கிறார். "சிறையிலிருப்பவர்கள் ஒருபோதும் உண்ணா விரதத்தை அனுஷ்டிக்கக் கூடாது" என்று கூறுகிறார். "ராஜீயக்கைதிகளை நீண்டகாலம் சர்க்கார் விடுதலை செய்யாமல் வைத்திருப்பதை நான் விரும்பவில்லை. இருந்தாலும் அந்த ஸ்திதியில் கைதிகள் இத்தீவிர விரதத்தை அனுஷ்டிப்பது கண்டிக்கத் தக்கது" என்று சொல்லுகிறார். பொதுஜன அபிப்ராயம் எந்த விதமாக இருக்கிறதோ அதன்படி சர்க்கார் தங்கள் கடமைகளைச் செய்துமுடிக்க வேண்டுமல்லவா? இப்பொழுது பொதுஜன அபிப்


பிராயம் இக்கைதிகளை நீண்டகாலம் சிறையில் வைத்திருக்கக்கூடாது என்பதுதான். காந்திஜி கைதிகளுக்குப் புத்திமதி சொல்லிவரும் பேச்சுகளே இதை ரூபிக்கலாம். இதை அறியாமல் தங்கள் போக்கிலேயே சர்க்கார் போய்க்கொண்டிருந்தால் அது கண்டிக்கத் தகுந்த விஷயம் தானே? எப்படி கண்டிப்பது? கைதிகளின் உண்ணுவிரத அனுஷ்டானத்தினுலல்ல! தலைவர்களின் முயற்சியால்தான்.

## கண்மூடி குதிரைகள்

இந்திய சமஸ்தானுதிபதிகள் இதுவரையில் காலப்போக்கின் அஞ்ஞானத்தாலோ, அல்லது துர்மந்திரிகளின் போதனைகளாலோ, கண்மூடி குதிரைகளைப்போல் ஸாரதி திவான்கள் எந்தப் பக்கம் திருப்புகிருர்களோ அப்பக்கம் திரும்பி, நிற்கச்சொன்னுல் நின்று, ஓடச் சொன்னுல் ஓடிவந்தார்கள். இப்பொழுது அவர்கள் கண்களைத் திறந்துவிட்டிருக்கிருர் காந்திஜி. தன் புதிய ஒளியால் அவர்களுக்கு உலகப் போக்கைக் காண்பிக்கிருர். "எந்த சமஸ்தானுதிபதியும், காலப்போக்கைக் கவனித்து அதற்குத் தகுந்தாப்போல் நடக்க முன்வரவேண்டும்" என்கிருர். "உடனே சமஸ்தான ஜனங்களுக்குப் பிரஜா உரிமை யளிக்கவேண்டும். சமஸ்தானுதிபதிகளின் சொந்த செலவுகளைப் போதியவளவு குறைக்க வேண்டும். பூரண சுதந்திரமுள்ள ஒரு நியாயஸ்தலம் ஒன்று ஏற்படுத்தவேண்டும்" என்று சில முக்கிய அம்சங்களைக் குறிக்கிருர். தற்கால ஸ்திதியை அறிந்து மேற்கண்ட உரிமைகளை ஜனங்களுக்கு அவசியம் கொடுக்க வேண்டும் என்று காந்திஜி சொல்லுவது மன்னர்களுக்கு தகுந்த காலத்தில் சிறந்த நற்போதனையாகும். காந்திஜி சமஸ்தான ஜனங்களின் போராட்டத்தை நிறுத்தி மன்னர்களுக்கு அவர்களுடைய கடமைகளைப்பற்றி விளக்கிக் காட்டியதை மன்னர்கள் பாராட்டுவார்கள் என்று நம்புகிருேம்.

## ஸர். எம். வெங்கட சுப்பராவ்

சென்னை உயர்தர நியாய ஸ்தலத்தில் வெகு நாட்கள் அனுபவம் பெற்ற ஸர். எம். வெங்கடசுப்பாராவ் ஹைதராபாத் நிஜாமின் பிரார் பிரதிநிதியாய் நியமிக்கப்பெற்றது மிக்க சந்தோஷத்தை யளிக்கிறது. சென்னை நியாய ஸ்தலத்தில் நீண்டகாலம் நியாயாதிபதி ஸ்தானம் வகித்தவர். பிரதம நியாயாதிபதியாக வெகுநாட்கள் அனுபவம் பெற்றவர். சமஷ்டி நீதிபதி ஸ்தானத்தை வகிக்கத் தகுந்த திறமையுள்ளவர். இப்பேற்பட்ட ஓர் சிறந்த மணியைத் தேர்ந்தெடுத்தது, ஹைதராபாத் நிஜாமின் புத்திசாலித்தனத்தையும், ராஜ்யபாரம் நடத்துவதில் தேர்ச்சி பெற்ற தன்மையையும் எடுத்துக் காட்டுகிறதல்லவா?



# தென்றல் காற்று

அன்று, பிரிட்டிஷ பிரதம மந்திரி ஒரு கனவு கண்டாரென்று தென்றல் காற்று வாக்கில் செய்திவந்திருக்கிறது. ஓர் அற்புதக் கனவு! ஹிட்லர் சேம்பர்லேன் தோளில் கையைப் போட்டுக் கொண்டு கொஞ்சிக்குலாவிக்கொண்டிருப்பதாக. என்ன அதிசயம்! சென்ற சில நாட்களாக அவர்களிருவரும் இருந்த இருப்பு நெருப்பில்லாமல் பத்திக் கொள்ளும்போ லிருந்தது. இப்பொழுது நீர் இல்லாமல் அணைந்து போனதாக வல்லவா கனவு! சேம்பர்லேன் கண்ணைப் பிசைந்துகொண்டு எழுந்தாராம்.

* * *

"இது என்ன அதிசயமாகக் கனவு கண்டுவிட்டதாகச் சொல்லுகிறீர்களே? உங்களுக்கு ஞாபகம் இல்லையோ?" என்றாள் அவர் மனைவி. "கனவு அற்புதக் கனவாகத்தான் இருக்கிறது. எனக்கும் அந்த அசுரப்பயலுக்கும் பொருத்தமே கிடையாதே. அப்படி இருக்கும்போது நான் எப்படி அவனோடு சிநேக பாவத்துடன் இருந்திருக்க முடியும்?" என்று மறுபடியும் திகைத்துக் கேட்டார் சேம்பர்லேன்

* * *

"சென்ற செப்டம்பரில் நீங்கள் பர்சசெஸ்கடனில் அவனுடன் விளையாடிவிட்டு வரவில்லையா? 'கௌரவத்துடன் சமரஸம்' என்று உங்களை எல்லோரும் வரவேற்கவில்லையா? நீங்கள் வீட்டு வாசற்படி ஏறினதும் ஏறாததுமாக நான்கூட உங்கள் கையிலிருந்த குடையை வாங்கி வைத்துக்கொண்டு வரவேற்க வில்லையா?" என்று ஞாபக மூட்டினாள்.

* * *

"இந்தக் கனவு உண்மையில் பலித்துப்போய் விட்டால் என்ன செய்வது போன வருஷம் நான் அவனிடமிருந்து தப்பித்துக்கொண்டு வந்தது பகீரதப் பிரயத்தனமாகப் போய்விட்டது. ஜெக்நாட்டைக்கூட விட்டுக் கொடுத்துவிட்டேன். இந்த வருஷம் கூட அவனிடம் போய் அகப்பட்டுக்கொள்ள வேண்டுமென்றால் என் தூரதிர்ஷ்டம்தான். நான்போகவே மாட்டேன். இங்கிருந்தபடியே அவனுக்கு வேண்டியதைக் கொடுத்து விடுகிறேன்" என்று முணுமுணுத்தார்.

* * *

ஒரு பிரபல ஜோஸியருக்கு இதைப் பற்றி சந்தேகம் வந்து விட்டது. சேம்பர்லேன் இரவு எந்த ஜாமத்தில் இந்த அற்புதக் கனவைக் கண்டார் என்று தெரிந்துகொள்ள விரும்பினாராம். "விடியற்காலையிலானால் உடனே அந்தச் சம்பவம் நேரும்—சேம்பர்லேன்—ஹிட்லர் சம்பாஷணை"—என்று யோசித்துக் கொண்டிருந்தாராம்.

* * *

அகில இந்திய முஸ்லிம் சங்கம் தன் அபிப்ராயங்களைப் பரவச் செய்வதற்காக, அயல்நாட்டில் பலவிடங்களில் தன் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தியதாக செய்தி கூறுகிறது. வெளிநாடுகளில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவதைக் காட்டிலும், இந்தியாவுக்குள் அதிக கிளைகள் ஸ்தாபித்து அதி தீவிரமாகப் பிரசாரம் செய்து தேசியக் கட்சியை எதிர்ப்பது மேல் என்று மஹம்மத் அலி ஜின்னா எண்ணுகிறாராம்.

* * *

ஒரிஸ்ஸா சர்க்கார், தங்கள் நிதியை விருத்திசெய்ய சிலவரிகள் போடப் போவதாகத் தெரிகிறது. அதற்கு மாகாணத்திலுள்ள பல பிரமுகர்களை அவரவர்கள் அபிப்ராயத்தை அனுப்பும்படி சர்க்கார் கேட்டுக் கொள்ளுகிறார்கள். வரி கொடுக்கப்போகும் பிரமுகர்களை மாத்திரம், கேட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது.

* * *

பீஹார் மாகாணத்தில் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர் ஸர்தார் ஹரி

ஹர ஸிங், ஷாஹாபாத் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியிலிருந்தும், இன்னும் மற்ற காங்கிரஸ் கமிட்டிகளினின்றும் விலக்கப்பட்டார் என்று செய்தி கூறுகிறது. ஜில்லாக் காங்கிரஸ்சபை, அவர்மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள மாகாண காங்கிரஸ் கமிட்டியை வற்புறுத்துகிறதாம். ஹரி ஹரசிங் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறாராம். கொஞ்சம் தைர்யம் இருந்தால் ஒரு கக்ஷி ஒன்று ஏற்படுத்திக் கொள்வார். பாவம்!

* * *

அகில இந்திய ரேடியோவில் பேசப் போகும் ஒருவரை அவர் நண்பர் "இன்று நான்கூட உன்னுடன் ரேடியோ நிலையத்திற்கு வருகிறேன்" என்றார். "அதற்கென்ன, அவசியம் வாருங்கள். நான் பேசுவது நன்றாக இருந்ததா இல்லையா என்று கேட்டு சொல்லுங்கள்" என்று சொல்லி நண்பரையும் அழைத்துக் கொண்டு நிலையத்திற்குச் சென்றார் பேசப் போகிறவர்.

* * *

"உங்கள் நண்பருக்கு இங்கு உட்கார இடமில்லையே" என்று மிகவும் மனவருத்தத்துடன் சொன்னார் ஒரு குமாஸ்தா. "அதுதான் நான்கூட அப்போதே எண்ணினேன். ஒரு நாற்காலியும் ஒரு ரேடியோ ரிஸீவிங் ஸெட்டும் கொண்டு வரலாம் என்று நினைத்தேன். கொண்டு வராதது என் தப்பிதம்" என்று சொல்லிக்கொண்டே, மெள்ள நழுவினார் பேசப்போகிறவரின் நண்பர்.

பீஹார் மாகாணத்தில் ஜனங்களைப் படிப்பிக்கும் முயற்சி ஆரம்பித்து ஒரு வருஷம் ஆனதால் வருஷக் கொண்டாட்டம் நடைபெற்றது. அவ்வாண்டு விழாவை சிரத்தையுடன் தொண்டு செய்த பல மாதர்கள் கொண்டாடினார்களாம். பல ஸ்திரீகள் பரிசும் பெற்றார்களாம். சிறு குழந்தைகளாக இருக்கும் போது தாங்கள் பள்ளிக்கூடங்களில் பரிசு பெறுவதற்குப் பதிலாக இப்பொழுது பெற்றதை எண்ணி எண்ணி அக மகிழ்கிறார்களாம்.

* * *

ஒரு சினிமாப் படத்தில் எமன் பாபிகளுக்கு தண்டனை விதிக்கும் கட்டம் காண்பிக்கப்பட்டது.

* * *

எமன் :—இவன் யார்?

கிங்கரன் :—இவன்தான் ஒரு பத்திரிகாசிரியர். தன்னிடத்தில் வந்த கட்டுரைகளை எல்லாம் "நன்றாக இல்லை நன்றாக இல்லை" என்று பல இளம் எழுத்தாளர்களை நாசமாக்கி விட்டான்.

எமன் :—அப்படியா?

கிங்கரன் :—ஆமாம், பிரபோ!

எமன் :—பல இளம் எழுத்தாளர்களை நசுக்கி அவர்களைக் கெடுத்ததனால் அவனைச் சுத்த பிண்ட மண்டலத்தில் கொண்டுபோய்த் தள்ளு. கர்ணகடூரமானதும், படிக்கத் தகாததும் சுத்த மோசமானதுமான பல கட்டுரைகளை அவன் திருத்தி தினம் என்னிடம் அனுப்ப வேண்டும். ஊம்! இழுத்துக்கொண்டு போ!

---

# நாம் எங்கிருக்கிறோம்?

நாம் அகில இந்திய விவகாரங்களில், எங்கிருக்கிறோம்? பத்திரிகைகள், ஒரு கக்ஷியை ஆதரித்தும், ஒரு பக்கத்தில் கூச்சல்கள் கிளப்பியும், நாம் 25 வருஷத்திற்கு முந்தி எந்த ஸ்திதியில் இருந்தோமோ அதே ஸ்திதியில் தான் இருக்கிறோம்.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் பிரஜைகளுக்கும், சமஸ்தானங்களிலுள்ள பிரஜைகளுக்கும், இயற்கையான வித்தியாசங்கள் இருக்கவில்லை என்பதை நாம் ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். சமஸ்தான ஜனங்கள் விஷயமாக ஏன் நமது மனது கரையக்கூடாது?

திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸானது தன் வழியே சென்றிருந்தால் திருவாங்கூர் மக்களுக்கு அதிக வெற்றி கிடைத்திருக்கும். அதேபோல் மைசூரும் சரி, ராஜகோட்டும் சரி. புதிய கொள்கை யென்பதெல்லாம் சமயோசித வாதந்தான். சமஸ்தான பிரஜைகளுடைய குறைகள் நிச்சயம் வெற்றிபெறும். ஆனால் கொஞ்சம் தாமத மேற்படும்.

மாகாணங்கள் விஷயமாக, நமது காங்கிரஸ் மந்திரிகள், இரண்டு, மூன்று நன்மைகள் செய்திருக்கிறார்கள். அவைகளுள் முக்கியமானது மது விலக்கு.

காங்கிரஸ் இப்பொழுது மந்திரி பதவியிலிருக்கிறது. அது பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைத்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது நடப்பது பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழையாமையல்ல. மகாத்மா காந்தியும், நமது பிரதம மந்திரியும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பலாத்காரத்தில் நடக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது கிரிமனல் லா அமெண்ட்மெண்ட் ஆக்ட்டும் போலீஸ் உதவியும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. அப்படி இருக்க அஹிம்சையைப் பற்றிப் பேசுவதில் என்ன பிரயோசனம்?

* * *

இப்பொழுது ஜனநாயக முறையில் காங்கிரஸ் நடக்கவில்லை. கட்சி முறையில்தான் நடக்கிறது. ஆனால் அது ஜனநாயகம் என்று நாம் நினைக்கிறோம். அது அல்ல. காங்கிரஸ் சர்க்காரானது கக்ஷி பேதத்தில் நடக்கிறது என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் மந்திரி சபை காங்கிரஸின் ஒரு சாரார்களால்தான் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

—ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார்



# வார நடப்பு

பண்டித ஜவஹர்லால் நேரு இலங்கை சென்றார். இலங்கை இந்தியர்கள் அன்புடன் வரவேற்றார்கள். இலங்கை இந்தியர்களுடன் சில முக்கியமான பிரச்னைகளைப்பற்றி ஆலோசனை செய்து வருகிறார். இங்கு நடந்த சம்பவங்கள் எல்லாம் காந்திஜியுக்குத் தெரிந்த பிறகுதான் காந்திஜியின் ஆலோசனையின் பேரில் இரு தேசங்களுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படும் என்று தெரிகிறது.

பம்பாய் மதுவிலக்கு சம்பந்தமாக சுபாஷ் போஸ் விடுத்த அறிக்கைகளால் தான் மிக்க வருத்தமடைந்ததாகக் கூறி, சுபாஷ் பாபு வங்காள காங்கிரஸ் தலைவராக இருந்தும், மாஜி அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தும், இப்படி பம்பாய் சர்க்காரின் மதுவிலக்குத் திட்டத்துக்கு விரோதமாகப் பேசுவது உசிதமல்ல என்று, ஸர்தார் பட்டேல் கூறுகிறார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தைதான் பம்பாய் சர்க்கார் நிறைவேற்றுகிறது என்றும், அவர்கள் முயற்சி வெற்றியடைய வேண்டும் என்றும் கூறுகிறார்.

வங்காளத்தில் அரசியல் கைதிகள் அனுஷ்டிக்கும் உண்ணா விரதத்தைக் கண்டிக்கிறார் மகாத்மாஜி. வங்காள சர்க்கார் அரசியல் கைதிகளை நீண்ட காலம் சிறையில் வைத்திருப்பதைதான் விரும்பாமல் போனாலும் கைதிகள் உண்ணா விரதத்தைக் கையாளுவது தப்பிதம் என்பதை நன்கு உணர்த்துகிறார்.

அரசியல் கைதிகளை சீக்கிரம் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கல்கத்தாவில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அடுத்தவாரம் ஸிம்லாவில் மாகாண சட்ட சபைத்தலைவர்கள் மகா நாடு ஒன்று நடக்கப் போவதாக செய்தி கூறுகிறது. சட்ட சபைத் தலைவர்களின் உரிமைகளைப்பற்றியும், சட்ட சபை அங்கத்தினர்களின் பேச்சுரிமைகளைப் பற்றியும், இன்னும் பலவிதமான முக்கிய அம்சங்களைப் பற்றியும் சர்ச்சை செய்வார்கள் என்று தெரிகிறது.

மைசூர் சமஸ்தான காங்கிரஸ், சமஸ்தானாதிபதியைக் கண்டு மறுபடியும் பொறுப்பாட்சித் திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று செய்த முயற்சிகள் வீணாயின. திவான் சமஸ்தான காங்கிரஸுக்குப் பேட்டியளிக்கவில்லையாம். அரசியல் திட்டத்தில் சீர்திருத்தங்கள் செய்வதாக மைசூர் சர்க்கார் இல்லை என்பதைத் தெரிவித்தாராம். இந்த சம்பவத்தைத் தீர ஆலோசித்து, ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று மைசூர் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் ஒன்று நடைபெறும் என்று தெரிகிறது.

கல்கத்தாவில் கிழக்கு இந்திய சமஸ்தான மந்திரிகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் சமஷ்டி பிரவேசத் திட்டத்தைப் பற்றி விவாதம் நடத்தினார்கள். பொதுவாக சமஷ்டியில் மன்னர்கள் பிரவேசிக்கலாம் என்கிற தீர்மானத்துக்குதான் வந்திருப்பதாகத் தெரிகிறது.

சென்னையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி காங்கிரஸ் மந்திரிகள் செய்த வேலைகளைப்பற்றி பேசி மந்திரி சபையைப் பாராட்டுகிறார்.

தஞ்சை ஜில்லாவில் ஸீனியர் பிரின்ஸின் ஆதீனத்திலுள்ள 99 கோவில்கள் ஹரிஜனங்களுக்கு திறந்துவிடப்பட்டன.

இது சம்பந்தமாக சென்னை கவர்னர் கோவில் அதிகாரிகளை ஆபத்தினின்றும் காக்க ஒரு அவசரச் சட்டம் ஒன்று பிறப்பித்திருக்கிறார்.

டான்சிக் பிரச்னை இன்னும் பிரச்னையாகவே இருந்து வருகிறது.

ஜப்பானுடன் இங்கிலாந்து சமரஸப் பேச்சுகள் நடத்த முயன்றது வீணாயின. கிழக்கு ஆசியாவின் நிலைமையை பிரிட்டன் கொஞ்சம் கண் திறந்து பார்த்து, அதில் தானும் தலையைவிட்டு மாட்டிக்கொண்டாலொழிய, ஜப்பான் சமரஸப் பேச்சு நடத்த ஒத்து வராது, என்பதாக சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் தெரிவிக்கிறார்.

# "இளமை"

(ஸ்ரீ ராஜப்பா)

வருக! வருக!!
இளமையே! வந்தனம்!
உன் எழில் என்னும் மணம்
இதய நாசியைத் திணரச்செய்து
அதனிடமிருந்து வரும் அறிவாகிய வீணையில்
இறப்பையும் அசட்டை செய்யும்
உணர்ச்சிக் கீதத்தை மீட்டுகிறது!
ஹா! அதனல் ஆலோசனை என்னும் கண்களை
மறதி எனும் நித்திரைத் தழுவிக்கொள்கிறது.
விருப்பும்வெறுப்பும் இல்லா ஒளிஅதில் இடம்பெறு
அந்த ஆனந்தப் பிரகாசத் தீயை [கிறது.
காலம் என்னும் மழை அணைத்து விடுகிறதே
வாழ்க்கைக் கடலில் முதல் எழும்
அலையின் புன்சிரிப்பு நீதான
மின்போல் ஒளிகாட்டி மனம்கூச
காட்சியளிக்க வருகிருய்? ஆனல்
உடைபட்ட குடத்து சலம்போல்
ஓடிவிடுகிருயே!
சரத்கால ஆற்று நீரைப்போல்
நீ எங்கு மறைந்து போகிருய்?
வஸந்தகால ரோஜாவைப்போல் மலர்ந்த நீ
தவறென்னும் காற்ருல் அலைக்கப்பட்டு
கவலை என்னும் தரையில் உதிர்ந்துவிடுகிருயே!
இதன் கருத்தென்ன?

# ஸம்ப்ரதாய க்ஷீணம்

(ஸ்ரீ வி. வி. சிந்தாமணி)

வைகாசி மாதம் சுந்தரமய்யங்கார் தகப்பனார் சிரார்த்தம். ஆனால் அவர் ஒரு பெரிய அட்வகேட்டாகையாலும், சட்ட சபையின் அங்கத்தினராகையாலும், எந்த பக்ஷம் எந்த திதியில் அது வருகிறதென்பதை மறந்துபோவது வழக்கம். உபாத்தியாயராவது அல்லது தன் பாரியாள் பொன்னம்மாளாவது என்றைக்கு வருகிறதென்று பார்ப்பது வழக்கம். வைகாசி மாதத்தில் கலியாண காலமாகையால் உபாத்தியாயர் கலியாணங்கள் செய்து வைப்பதிலேயே மூழ்கியிருந்தார். இதைக் கவனிக்க அவகாசமில்லை. சுந்தரமய்யங்காருக்குப் பஞ்சாங்கம் பார்க்கத் தெரியாது. பொன்னம்மாள் தான் அனேகமாய் அந்த வீட்டில் பஞ்சாங்கத்தை உபயோகிப்பது. பொன்னம்மாளுக்கு திடீரென்று மாமனார் சிரார்த்தம் வைகாசியில் வருவது வழக்கமென்று கனவு மூலமாய் ஞாபகம்வர, மறுநாள் தானே பஞ்சாங்கத்தைப்பார்த்தாள். சுக்லபக்ஷம் நவமி திதி திங்கட்கிழமை வறுகிறதென்று கண்டுபிடித்து, பிச்சத்தில் செய்வதா இல்லையா என்பதுமட்டும் தெரியாமல் உபாத்தியாயருக்கு இரண்டொருதரம் ஆள்விட்டனுப்பினாள். ஒரு முறை அவர் திருச்சானூர் போயிருப்பதாகவும், மற்றொரு முறை திருநீர் மலை போயிருப்பதாகவும் பதில் வந்தது. நம்முடைய ஸம்ப்ரதாயங்கள் இத்தனை காலம் நிலை நின்றிருப்பதற்கு மூலாதாரம் பெண் பிள்ளைகளல்லவா? பொன்னம்மாளுக்குக் கவலை அதிகரித்தது. சிரார்த்தம் நடக்க வேண்டுமே என்ற அவாவாயிருந்தாள். இரண்டொரு தினம் கார்த்தும் உபாத்தியாயர் வரவில்லை. வேறொருஉபாத்தியாயருக்குச் சொல்லியனுப்பினாள். அவரை, "ஸ்வாமி, மாமனார் சிரார்த்தம் சுக்லபக்ஷம் நவமி திதியில் வருகிறது. அது என்றைக்கு வருகிறதென்று பார்த்து சொல்லும்," என்று கேட்டாள் பொன்னம்மாள்.

"அம்மா, உங்களுக்கு உபாத்தியாயர் வீரராகவாச்சாரியார். அவரைக்கேட்காமல் என்னைக் கேட்கிறீர்களே" என்றார் தேசிகாச்சாரியார்.

"உங்களுக்கு சொல்வதற்கு இஷ்டமில்லையா, அல்லது அவர் கோபித்துக் கொள்வாரென்று பயப்படுகிறீர்களா?" என்றாள் பொன்னம்மாள்.

"எனக்கு ஸம்மதம்தான்; அவரிடமும் பயமில்லை. தங்களுக்கு நான் உபயோகப்படும் அதிர்ஷ்டம் வாய்த்ததே எனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. இன்றை முதல் உங்களுக்கு உபாத்தியாயம் செய்விக்கும் பாக்கியம் கிடைக்குமென்று நம்புகிறேன்," என்றார் தேசிகாச்சாரியார், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுகிறாப்போல்.

"அதற்கென்ன? பகவான் கிருபையிருந்தால் அப்படியே நடக்கிறது" என்றாள் பொன்னம்மாள், தேசிகாச்சாரியின் உள் எண்ணத்தை அறிந்தவளாய்.

பஞ்சாங்கத்தை ஏறக் கீழப்பார்த்து விட்டு ஞாயிற்றுக்கிழமை 15௳ வருகிறதென்று தீர்மானித்தார் தேசிகாச்சாரியார். ஞாயிற்றுக்கிழமை சிரார்த்தம்வருவதில் பொன்னம்மாளுக்கு ஸர்வ சந்தோஷம். ஏனெனில், சாவகாசமாயும் ஏதோக்தமாயும் நடத்தக்கூடும். திங்கட்கிழமையானால் அவசரக் கோலம் போலாய் விடும்; ஆனாலும் தான் பார்த்தது எவ்விதத்தில் தப்பென்று அறிந்து கொள்வதற்காக "திங்கட்கிழமை யல்லவா வருகிறது?" என்று கேட்டாள் பொன்னம்மாள்.

"பிச்சத்தில் செய்யப்படாது," என்றார் தேசிகாச்சாரியர்.

"தங்களுக்கு அனேக வந்தனம். தாங்களே பிராம்மணார்த்தத்திற்கும் ஸ்வாமிகளை ஏற்பாடு செய்யுங்கள்," என்று

பொன்னம்மாள் தேசிகாச்சாரியரைக் கேட்டுக்கொண்டாள்.

சனிக்கிழமை இரவு வீரராகவாச்சாரியர் அதிக அவசரமாய் ரெயிலிலிருந்து இறங்கி வீடு வந்து சேர்ந்ததும் சுந்தர மய்யங்கார் வீட்டிற்குக் கிளம்பினுர். வேலையை முடித்துக்கொண்டு படுக்கப் போகும் தருணத்தில் பொன்னம்மாளை வீரராகவாச்சாரியர் கண்டார்.

"என்ன ஸ்வாமி, இத்தனை நாள் காணும்? இந்த காலத்தில் உத்தியோகஸ்தர்கள்கூட தங்கள் கடமையை சரியாக நடத்தி வருகிறுர்கள் என்ன அசந்தர்ப்பம் நேரிட்டாலும். தாங்கள் இவ்வளவு நாள் எங்கள் சொத்தை சாப்பிட்டும் எங்கள் வீட்டு காரியத்தின் மீது கவனமில்லாம லிருக்கிறீர்கள். மாமனுர் சிரார்த்தம் எப்படி ஆகுமென்று நினைக்கிறீர்கள்?" என்று கோபாக்கிரோஷத்துடன் கேட்டாள் பொன்னம்மாள்.

"அம்மா, என்னை க்ஷமிக்கவேண்டும். இது கல்யாண மாதம். இந்த வருஷம் இங்கே கல்யாணம் இத்தனை வருஷங்களைக் காட்டிலும் அதிகம். எனக்குச் சாப்பாடு ..கம் கிடையாது. இருந்தும் இந்த வீடு எனது சொந்த வீடாகையால் தருணம் தப்பாமல் வந்து சொல்லலாமென்றிருந்தேன். நாளை சிரார்த்தம். பிராம்மணுளையும் ஏற்பாடு செய்து விட்டேன்," என்றுர் வீரராகவாச்சாரியார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. வர வர நீங்கள் இந்த வீட்டின் மீது அலக்ஷியமா யிருக்கிறீர்கள். பணம் சேர்ந்து விட்டாலே யாவருக்கும் கொஞ்சம் மயக்கந்தான்" என்றுள் பொன்னம்மாள்.

"அம்மா, அப்படி சொல்லக் கூடாது. உங்கள் மாமனுர் காலம் முதல் எனக்கு இந்த வீட்டின் உபாத்தியாயம். அப்படி ஒன்றும் அலக்ஷியமில்லை. இதன் பொறுப்பு எனக்கு இருக்கிறது. உங்களுக்கு என் மீது நம்பகமில்லாமல் போனதைப்பற்றி நான் மிகவும் வருத்தப்படுகிறேன்," என்றுர் ஸ்வாமி.

பொன்னம்மாளுக்கு மனமிரங்க ஆரம்பித்து விட்டது. ஆனுல் இந்த சிரார்த்தத்திற்கு தேசிகாச்சாரியர் மூலமாய் ஏற்பாடு செய்து முடித்தாய் விட்டதே என்கிற வருத்தத்துடன், "சிரார்த்தம் நாளைக்கு. இன்றைக்கு ஒன்பது மணி வரையில் தேவள் கண்ணுக்கப்படாததால் நாளைக்குள் வந்து சேரமாட்டீர்கள் என்ற எண்ணத்தால் நான் வேறு ஏற்பாடு செய்து விட்டேன். அதை மாற்றுவது தவறு. நான் சொன்னவார்த்தையைத் தவறுவதில்லை. இந்த சமயம் போகட்டும். பிறகு பார்த்துக்கொள்வோம்," என்றுள் பொன்னம்மாள்.

தலை யிறக்கத்துடன் வீரராகவாச்சாரியார் வெளியே வந்தார். மஹான் சுந்தர மய்யங்கார் வீட்டில் முப்பது வருஷங்களாய் உபாத்தியாயம் செய்தும் அவர்களுக்குத் தன் மீது நம்பகமில்லாமற் போய்விட்டதே என்ற வருத்தம். கலியாணமென்றுல் அவர் வீட்டிலிருந்து இரண்டு மாதத்திற்கு வேண்டிய சாமான்களும், பார்யாளுக்கு கடிகாரச் சங்கிலி செய்வதற்குப் போதுமான பணமும் கிடைப்பது வழக்கம். மற்றப்படி சில்லரை விஷயங்களில் அதாவது காது குத்துதல், அக்ஷராப்பியாஸம், உபநயனம், பூச்சூட்டல் இம்மாதிரி விசேஷ காலங்களில் கிடைக்கும் பணத்தால் காலக்ஷேபம் செய்து வந்தார். பார்யாளுக்கு வைரக்கல் தோடும் போட்டுவிட்டார். அவ்விடத்தில் சிரார்த்தமென்றுல் சிரார்த்தமா? அன்றைக்கு தேசிகரன்ஸு வேஷ்டி, விரலில் பவித்திரம், வெள்ளி பஞ்சபாத்திரம், கையில் ஐந்து ரூபாய், இவை வரவு. இந்த வீட்டு சிரார்த்தத்தில் ஒரு இலை கிடைக்காதா என்று அனேகம் பேர்களுக்கு ஆவலுண்டு. இப்படிப்பட்ட இடம் தவறி விட்டதே என்று மனச்சஞ்சலத்துடன் வீடு சேர்ந்தார். பசி மறந்துவிட்டார். தான் சொல்லியிருந்த பிராம்மணர்களை நிறுத்திவிட்டு வருவதற்குக் கிளம்பினுர். அவர்களிடத்தில் என்னவென்று சொல்வது?

தலைக்குமேல் அவமானம். இருந்தாலும் சொல்லித்தானே ஆகவேண்டியிருக்கிறது.

"திருமலை, நீ நாளைக்கு சுந்தரமய்யங்கார் வீட்டில் பிராம்மணார்த்தத்திற்கு வரவேண்டியதில்லை. ராமய்யங்காருக்கும் சொல்லிவிடு," என்றார் வீரராகவாச்சாரியர்.

"என்ன ஸ்வாமி, அப்படி ஸாதிக்கிறது? அந்த வரும்படியை நம்பி பால்காரனுக்குப் பணங்கொடுக்கிறேனென்று சொல்லியிருக்கிறேனே?" என்றார் திருமலை.

"அவர்கள் வேறு ஏற்பாடு செய்துகொண்டு விட்டார்கள், இன்றையவரைக்கும் என்னைக் காணாததால்."

"வழக்கமாய் தேவள்தானே ஏற்பாடு செய்வது? தேவளுக்கில்லையோ இதன் பொறுப்பு? தேவள் உபாத்தியாயத்தையும் நிறுத்திவிட்டார்களா என்ன?" என்று ஏளனமாய்க் கேட்டார் திருமலை.

இப்போது அவமானத்துடன் பொறாமையும் திருமலையால் வீரராகவாச்சாரியருக்கு உண்டாயிற்று.

"என் உபாத்தியாயம் போனதாகத் தெரியவில்லை. எந்த புத்தில் எந்த பாம்பு இருக்குமோ? இப்போ எனக்கு சந்திர தசை ராகு புக்திபோலிருக்கிறது. தேசிகாச்சாரியர் என்ற உபாத்தியாயர் இந்த இடத்தைப் பிடித்துக்கொண்டு விடுவாரோ என்னமோ? விஷக்கடி வேளை," என்று எல்லையில்லாத் துயரத்துடன் புலம்புவதற்கு சமானமாய் வீரராகவாச்சாரியர் சொன்னார்.

"இதற்கு என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்?" என்றார் திருமலை.

"போகப் போகத்தான் பார்க்கவேண்டும்," என்றார் வீரராகவாச்சாரியர்.

வீரராகவாச்சாரியர் தன் வீட்டிற்குத் திரும்பினார். தூக்கமில்லை. அந்த வீட்டிற்கு சிரார்த்த வேளைக்குப் போவதா போகாமலிருப்பதா? போனால் தேசிகாச்சாரியர் செய்து வைக்கும்போது தான் சும்மா விருப்பது அவமானம். போகாவிட்டால் மனஸ்தாபம் முற்றி இந்த இடத்தையே இழந்து விடவேண்டி வரும். பாக்கு வெட்டிக்குள் அகப்பட்ட பாக்கைப்போல் அவர் திண்டு மிண்டாடினார்.

சிரார்த்தம், கையில் புல்லைக் கோர்த்துக்கொண்டு, அரையில் பட்டுக்கரை வேஷ்டி உடுத்திக்கொண்டு, மேல் வேஷ்டியை அரையில் அணிந்துக்கொண்டு, ஊர்த்வ புண்ட்ரம் தரித்துக்கொண்டு, தேப்பெருமாளைப் போல், வீற்றிருந்தார் சுந்தரமய்யங்கார். தாயாரைப்போல் பக்கத்தில் பொன்னம்மாள். 'புதிய துடைப்பம் விளக்குவது போல்' என்று ஆங்கிலத்தில் சொல்வது. இந்த உபமானம் தேசிகாச்சாரிக்கு அவமரியாதையாக இருந்தாலும் தகும். ஓரே கோஷமாய் மந்திரங்களை உச்சரிப்பதும் உள்ளும் வெளியும் போய் அரிசி, பழம், சொம்பு, எள்ளு முதலியவைகளைத் தானே கொண்டுவருவதும், இப்படியாக தடபுடல் செய்தார். அக்னியைச் சுற்றி வேஷ்டி மூன்று ஜதையும், சொம்பு பஞ்சபாத்திரம் மூன்று ஜதையும், பவித்திரம் மூன்றும் காணப்பட்டன. பிராமணார்த்தக்காரர்களுக்கு காலலம்பி உபசரித்தாய்விட்டது. இலை மூன்றிடத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அவைகளில் உபாத்தியாயர் ஸகிதமாய் மூன்று பேரும் உட்காரப் போனார்கள். மணி 11-30. பத்து பெயர்கள் கூடத்தில் அபிச்ரவணம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் திருமலையும் ஒருவர். அவருக்கு தேளின் விஷம் எப்படி கொஞ்சங் கொஞ்சமாய் ஏறுமோ அப்படி பொறாமை அதிகரித்துக் கொண்டே வந்தது. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் கூடத்திற்கு வந்தார்கள். கலகலவென்று ரூபாய் ஓசைப்பட்டது. ஒவ்வொருவருக்கும் ஐந்து ஐந்து ரூபாய் வெற்றிலைப் பாக்கில் வைத்தாகிவிட்டது. தக்ஷிணை கொடுக்கும் தருணம். பயித்தியம் பிடித்தவனைப்போல் திருமலை கத்தினார்.

"ஓய், ரங்காச்சாரியரே, நீர் ஒரு நாளைக்கு எத்தனை இடத்தில் பிராம்

மணர்த்தம் சாப்பிடுவீர்? ஒன்பது மணிக்குத் திருவல்லிக்கேணியில் வரதாச்சாரி வீட்டில் பிராம்மணர்த்தம் இருந்துவிட்டு இப்போது இங்கேயும் இருக்கிறீரே?''

இதைக்கேட்டதும் எல்லோரும் திடுக்கிட்டார்கள். ரங்காச்சாரிக்கு ஒரு பக்கம் அவமானம், இன்னொரு பக்கம் கோபம். இந்த அபவாதத்தை பொய் என்று எப்படி நிரூபிப்பது என்று வருத்தப்பட்டார். அவருக்கு பிராம்மணர்த்தத்திலேயே ஸம்பாத்தியம். அதை வைத்துக்கொண்டு தன் பிள்ளையைக் காப்பாற்றிபி. ஏ. ஆனர்சு வரையில் கொண்டு வந்துவிட்டார். இப்போது இந்த அவமானச் சுமை காரியத்தைக் கெடுத்து விடும். பாதி வழியில் தாம்புக்கயிர் அறுந்து விட்டாற்போ லாய்விட்டதே? வருமானத்தில் மண் விழுந்துவிடுமே?

தான் செய்த முதல் காரியம் தப்பாகி விட்டதே என்று துக்கித்தார் தேசிகாச்சாரியர்.

இதை ஆராய்ந்து பார்ப்பதா, காரியத்தை நடத்தி முடிப்பதா என்று கவலைப்பட்டார் சுந்தரமய்யங்கார்.

பொன்னம்மாள் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. "சிரார்த்தம் வீணுகி விட்டதே என்ன செய்வது?" என்றுள் பொன்னம்மாள்.

"திருப்பித்தான் செய்ய வேண்டும்," என்றுர் திருமலே.

அபிச்ரவணம் செய்த எல்லோரும் திருமலே பக்கம் பேசினுர்கள்.

மயக்கம் அதிகரித்து, "அபிச்ரவணத்திற்கு வந்தவர்களே வெளியே துரத்தி விடுங்கள். நான் மெத்தைக்குப் போய் பத்து நிமிஷத்தில் யோசித்துக்கொண்டு வருகிறேன்," என்றுர் சுந்தரமய்யங்கார்.

அபிச்ரவணக்காரர்கள் எதிர்வீட்டில் நின்று வேடிக்கை பார்க்க, உபாத்தியாயரும் பிராம்ணர்த்தக்காரரும் உள்ளே திகைத்துநிற்க, ரங்காச்சாரி தான் நிரபராதி என்றதைக் காண்பித்துப் புலம்ப, பத்துநிமிஷத்தில் சுந்தரமய்யங்கார் கீழே இறங்கிவந்து, "காரியத்தை முடித்து விடுங்கள்" என்று தாபத்துடன் சொன்னுர்.

காரியம் முடிந்துவிட்டது. அவரவர்கள் தங்கள் தங்கள் வீட்டிற்குப் போனுர்கள்.

பொன்னம்மாள், "இது என் தப்பு தான்," என்றுள் சுந்தரமய்யங்காரிடம். "பழைய உபாத்தியாயரையே நம்பியிருந்தால் இவ்வளவுதூரம் வந்திராது".

சுந்தரமய்யங்காருக்கு இரக்கம் வந்துவிட்டது. பாரியாள்மீது அவர் எப்போதும் தப்பு கண்டுபிடிப்பதில்லே. மேலும் இதை ருசுப்படுத்துவது அஸாத்தியமானது. நடந்தது நடந்துவிட்டது. சிரார்த்தம் என்றுல் சிரத்தையாகச்செய்வது என்பார்கள். தானும் தன் பாரியாளும் காப்பிகூட சாப்பிடாமல் சிரத்தையுடன் செய்தார்கள் என்பதில் சந்தேகமில்லே. அதுவே பித்ருக்களுக்கு பிரீதி. பிராம்ணர்த்தக்காரர்கள் சிரத்தையாகவும் சுசியாகவும் இருக்கிறுர்களா இல்லேயா என்பதைக் கவனிக்கவேண்டியது அனுவசியம்; மேலும் அஸாத்தியம். காலமோ கெட்டுப் போய்விட்டது. வைதிகர்கள் குறைவு. இருப்பவர்களும் நற்பாத்திரர்களல்ல. ஆகையால் அவர்கள் செய்த தப்பினுல் சிரார்த்தம் வீணுகிவிடும் என்பதில் நியாயமில்லே. இன்னும் வரவர காலம் கெட்டுப்போய்விடும். இங்கிலீஷ் ஸர்வ கலாசாலே தினம் ஒன்று ஏற்படுத்தப்படுகிறது. படித்து பாஸ் செய்பவர்கள் பிராம்ணர்த்தம் சாப்பிட ஒப்பமாட்டார்கள். அதில் வரும்படி அட்வகேட் வரும்படிக்கும் ஜட்ஜுவரும்படிக்கும் சமானமாகுமா? உபாத்தியாயரும், பிராம்ணர்த்தக்காரர்களும் அகப்படாவிட்டால் சிரார்த்தத்தைவிட்டுவிட வேண்டியதுதான். நமது பிராம்மண ஸமூகத்தைச் சீர்திருத்தமாவது செய்ய வேண்டும். அல்லது கர்மாக்களேயாவது விட்டுவிடவேண்டும். இதற்கெல்லாம் தீர்க்காலோசனே செய்யவேண்டும் என்று, சஞ்சலத்துடன் தன் நண்பர்களே வரவழைத்துயோசிக்கத் தொடங்கினுர் சுந்தரமய்யங்கார்.

# காலத்தின் கோலம்

(ஸ்ரீ டி. எஸ். ரமணி)

நம் நாட்டில் குடும்ப பரம்பரை வரலாறுகளை நாம் எழுதிவைப்பதில்லை. மேல் நாடுகளில் அவரவர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை முன்னூறு அல்லது நானூறு வருஷங்களுக்கு முன் உள்ளலார்டு அல்லது ஒரு கியாதி பெற்றவர்கள் வரையில் கொண்டுபோய் முடிப்பதைக் காணலாம். நம்மிடமோ வீட்டில் கிராமத்திலுள்ள பெரியவர்களைக் கேட்டால் தான் நம் முன்னோர்களுடைய சரித்திரம் தெரியும். கிராமங்களில் சென்று வயது முதிர்ந்த கிழவர்களைக் கேட்டால் அநேக குடும்பங்களின் வரலாறுகளைத் தெரிந்து கொள்ளலாம். இவ்விதம் விசாரிக்கத்தொடங்கினால் ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு தலைமுறைக்கு முன் ஷஷ்டி பூர்த்தி—அறுபதாவது வயது கலியாணம்—நடக்காத குடும்பமே யில்லை என்று சொல்லாம்.

இதை யோசிக்கும்போது இரண்டு தலை முறைக்குள் நம் ஆயுள் குறைய நாம் என்ன செய்து வருகிறோம் என்ற கேள்வி உதிக்கும். உஷ்ணமான பிரதேசமாக இருந்தாலும் இதே இந்தியாவில் நம் முன்னோர்கள் அறுபது வயதிற்கு மேல் திடகாத்திரத்துடன் வாழ்ந்ததின் மர்மம் என்ன? இக்காலத்தில் நம் ஆயுள் மாத்திரம் குறைவதற்குக் காரணம் யாது? நாகரீகத்தில் முன்னேறுவதாக பெருமை பேசிக்கொள்ளும்போது நம் ஆயுள் மாத்திரம் குறைவதைக் காண்கிறோம். முன்னோர்களின் பழக்க வழக்கங்களையும், இந்நாளில் நம்முடைய பழக்க வழக்கங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நமக்கு நலம் தரும். ஆயுள் விருத்தியை கொடுக்கக் கூடியது பழைய காலத்துப் பழக்கமானாலும் ஏன் கைக்கொள்ளக் கூடாது ?

ஆயுளை விருத்தி செய்யும் பழக்கங்கள் ஒன்று இரண்டு அல்ல. கடைகளில் காசைக் கொடுத்து சாமான் வாங்குவது போல் வாங்கிவிட முடியாது. இந்நாளில் மலச்சிக்கலுக்காக விளம்பரம் செய்யப்பட்ட மருந்துகள்போல் வாங்கி சாப்பிட்டால் கொஞ்சம் குணம் அடையலாம் என்று எண்ண முடியாது. காலை முதல் இரவு படுக்கப் போகும் வரையில் செய்யும் ஒவ்வொரு செய்கைகளையும் பொறுத்திருக்கின்றது. நம் ஆயுள். இவை நம் ஆயுளை விருத்தி செய்யவோ, குறைக்கவோ நாளடைவில் வலிவு பெறுகின்றன. ஒவ்வொரு சிறு செய்கையும் தினம் தினம் செய்வதால் நம்மிடம் வேரூன்றி முடிவில் நம்மால் தள்ள முடியாமல் தவிப்பதைப் பார்க்கலாம். முடிவில் நாம் அப்பழக்கத்திற்கு அடிமையாகிறோம்.

ஆயுளைக் குறைக்கக் கூடிய பழக்கம் இது தான் என்று நம்மிடம் ஒன்றை மாத்திரம் சுட்டிக் காட்ட யாராலும் முடியாது. அப்படி செய்யும்போது சில சமயம் அந்தப் பழக்கத்தையே செய்து வந்து திடகாத்திரர்களாக இருப்பவர்களை உதாரணமாக நமக்கு எடுத்துக் காட்ட பலர் முன் வருவார்கள். இந்த வீண் வாதத்தால் நாம் செய்வதே சரி என்று ஒரு முடிவுக்குத்தான் வருவார்கள். கடைசியில் பலன்தான் விபரீதமாக யிருக்கும். அனுவசியமான பல சிறு பழக்கங்கள் சேரும்போது நம் தேக வலிவைக் குறைக்கக் கூடிய வலிவு பெறுகின்றன. தேக பலம் குன்றியவுடன் பல வியாதிகள் நம்மை அணுக வசதி ஏற்படுகிறது. ஆயுளும் குறைகிறது.

உதாரணமாக ஒரு சிறிய வியாதியை எடுத்துக் கொள்வோம்—மலச்சிக்கல். இதை சுலபமாகத் தடுத்துக் கொள்ள முடியும். ஆனால் நம்மில் பலரிடம் காணப்படும் இந்த தொந்திரவு எல்லா வியாதிகளுக்கும் அடிப்படையாக இருக்கிறது. இதைப் பற்றி மற்றொரு தடவை விபரமாகச் சொல்லுவோம்.

ஒரு சிறு குச்சியை சுலபமாக முறித்து விடலாம். ஆனால் பல சிறு குச்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கட்டாக யிருக்கும்போது முறிப்பது கஷ்டம். இதே விதம் சுகாதார முறைக்கு மாறுதலான பல பழக்கங்கள் சேரும்போது அதிக வலிவு பெற்று நம் தேக வலிவைக் குறைக்கின்றன. ஓடுகிற ஜலத்தை ஒரு சிறு துரும்பு தடுக்கிறதில்லை. ஆனால் ஒவ்வொரு வைக்கோல் துரும்பாக பல சேரும்போது பெரும் வெள்ளத்தையும் தடை செய்யக் கூடிய வலிவை யடைகிறது இதே விதம் ஆயுளைக் குறைக்கக் கூடிய பல பழக்கங்கள் சேரும்போது நம் உடல் நலம் குன்றுகிறது.

தேக சௌக்கியத்திற்கு மீறிய ஆடம்பரமான அதிக ஆடை; இரவில் அதிக நேரம் கண் விழிப்பு; உட்கொண்ட ஆகாரம் ஜீரணம் ஆவதற்குமுன் அடிக்கடி கிளப்பிலும் கண்ட இடங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் சாப்பிடுவது; சத்தில்லாததும் இயற்கையா யில்லாததும், டின்களிலும் வெகு நாள்கள் முன் தாயார் செய்து நாவுக்குமாத்திரம் ருசி கொடுக்கக் கூடிய ஆகாரங்கள்; போதிய அளவு தேகப் பயிற்சி யில்லாமல் ஓயாமல் மூளைக்கு மாத்திரம் வேலை கொடுப்பது; இவைகள் போல் பல தற்கால நாகரீகத்தின் முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக தேகத்தில் கெடுதல்களை உண்டுபண்ணி நாளடைவில்நம் ஆயுளையும் குறைக்கின்றன. புகையிலை இல்லாத நாகரீகம் புது நாகரீகம் இல்லை யென்று, பொடியாகவோ, சுருட்டாகவோ, வெத்திலை பாக்குடனாவது உபயோகப் படுத்தியும் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வது இக்காலத்தின் கோலமாகயிருக்கிறது. மது பானத்தைத் தடுக்க முயற்சிப்பது ஒரு நல்ல காலம் என்று சொல்ல வேண்டும். இருள் சூழ்ந்த இரவுக்குப் பிறகு சூரிய உதய அறிகுறிகாட்டுவதுபோல் தோன்றுகிறது.

முன் காலத்தில் ஒரு சிறிய கெட்ட அப்பியாசத்தையும் சமூகத்தில் நாலு மனுஷ்யர்கள் முன் செய்ய வெட்கப் படுவார்கள். ஒருவித கட்டுப்பாடு இருந்தது. இந்நாளில் சுயேச்சையென்ற பெயரின்கீழ் எதையும் செய்ய அஞ்சுகிறதில்லை. போதாக்குறைக்கு அயல் நாடுகளைப் பறித்து காப்பியடிக்க முயலுகிறோம். அதிலும் முழுவதும் செய்கிறதில்லை. தேகப் பயிர்ச்சிக்காக குதிரை சவாரி, கோல்ப், வேட்டையாடுவது, கிரிக்கட், முதலிய அயிடங்களில் நாம் மேல் நாடுகளைப் பின்பற்றுகிறதில்லை. மேல் நாடுகளில் அவர்களுக்கு இதிலிருக்கும் ஊக்கம் நமக்கு உண்டாகிறதில்லை. சிகரெட் பிடிப்பதிலும், கிராப் செய்துகொள்வதிலும் அவர்களைப்போல் உடைதரித்துக் கொள்வதிலும் மாத்திரம் அனேகமாகப் பின்பற்றுகிறோம். இதன் முடிவு தேகப் பயிற்சியின்றி தேகத்திற்கு கெடுதல்கள் உண்டாகும் வழிகள் மாத்திரம் நம்மிடம் மிஞ்சுகின்றன.

கையால் குத்திய சத்துள்ள அரிசிக்கு சிரமப்படவேண்டும் என்று, சுலபமாக மில்களில் நன்றாகத் தீட்டி மேலேயிருக்கும் சத்தை யெல்லாம் தள்ளிவிட்டு சக்கை அரிசியைச் சாப்பிடுவது போல் தானிருக்கிறது. நம்மையே நாம் ஆராய்ந்து பார்த்து உடல் நலத்திற்குக் கெடுதல்கள் உண்டுபண்ணுகிற சிறிய பழக்கங்களை ஒவ்வொன்றாக விட்டுவிட முயற்சிப்போமாகில் நம் ஆயுள் அபிவிருத்தி யடையும் என்பதற்கு ஐயமில்லை.

# "போலிஷ் காரிடார்"

[ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி]

"கிழக்கு பிரஷ்யாவையும், தாயகமாகிய ஜெர்மனியையும் ஈட்டி குத்துவது போல் குத்தி தனித் தனியே போலிஷ் காரிடார் பிரிக்கிறது. அதனை ஒழித்து ஜெர்மன் மக்கள் ஒழுங்காக விருப்பதை நிறைவேற்றுவதே என் வேலை" எனக் கூறி ஜெர்மனியிலும், கிழக்கு பிரஷ்யாவிலுமுள்ள ஜெர்மன் மக்களின் ஆவேசத்தைக் கிளப்பி ஆதரவு பெற்ற ஹெர் ஹிட்லர் இன்று சும்மா இருப்பாரா? ஆஸ்திரியாவை அபகரித்தாலென்ன? ஸுடேடன் பிரதேசத்தைப் பெற்றுலென்ன? ஜெக் நாட்டையே விழுங்கினுலுமென்ன? மெமல் காலில் வந்து விழும்படி செய்தாலு மென்ன? ஒரு சிறு பிரதேசம் டான்சிக்கையும், போலிஷ் சந்தையையும் பெருவிட்டால் அவர் தம் மதிப்புத்தான் என்ன! எந்த குறையினுல் ஆதரவு பெற்றுரோ அதையே நீக்காவிட்டால் மற்ற மாபெரும் வேலைசெய்தென்ன? ஆகவேதான் போரென்றுல் அஞ்சும் ஹிட்லர், போலந்திற்குள்ள பக்க பலத்தைக் கண்டு பூனை மாதிரி பதுங்கி அபகரிக்கப் பார்க்கிறுர்.

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் போலந்து பாகமிடப்பட்டபோது மேற்கு போலந்து ஜெர்மன் ஆட்சிக் குட்பட்டதாக இருந்தது. ஜெர்மனியர்கள் பிஸ்மார்க் வேதாந்தப்படி, போலிஷ் மக்களை ஜெர்மானியராக்க முயற்சி செயதார்கள். போலிஷ் மொழி வழங்குதலோ, போலிஷ் கல்வி நிலையங்கள் நிறுவதலோ தடை செய்யப் பட்டது. இன்று தென்னடாலில் முசோலினி ஆஸ்திரிய ஜெர்மானியருக்கு இழைக்கும் அநீதிகளைவிட அதிகமாகவே ஜெர்மனி தன் ஆட்சியிலுள்ளபோலிஷ் மக்களுக்கு அநீதி இழைத்தது. மேற்கு போலந்திலுள்ள நிலங்கள் யாவும் ஜெர்மன் மக்களிடமிருக்க வேண்டுமென்று ஜெர்மானியர் அந்நிலங்களை அரசாங்கத்தால் வாங்க பொருளுதவி பெற்றுர்கள். அவ்விடத்தில் ஜெர்மானியர் குடியேறவும் உதவி பெற்றுர்கள். நிலங்களை விற்க மறுத்த போலிஷ் மக்கள் பல துன்பங்களுக்கு உள்ளாயினர். அவர்கள் மனைகள் கட்டிக்கொள்ளக் கூடாதென்று அரசாங்கத்தார் விதி செய்தனர். போலிஷ் மக்கள் வர்த்தகத்தையும், கைத்தொழிலையும் விட வேளாண்மையே சிறந்ததெனக் கருதுகிறவர்களானபடியால் நிலங்களை விடச் சம்மதிக்க வில்லை. ஆகவே, தங்கள் நிலங்களிலேயே தட்டிக் குடிசைகளைக் கட்டிக்கொண்டு பிடிவாதமாயிருந்தார்கள். புதியதாக போலிஷ் குடியரசு நிறுவப்பட்டபோது அத்தகைய சாத்விக எதிர்ப்பைக் கையாண்டவர்களுக்குப் புதுசர்க்கார் சன்மானம் அளித்தது.

சென்ற ஏப்ரல் 28-ம் தேதி ஜெர்மன் சர்க்கார், 1934-ம் ஆண்டில் அதற்கும் போலந்திற்கும் ஏற்பட்ட பத்தாண்டு அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தைப் புறக்கணிப்பதாகத் தெரிவித்தபோது, டான்சிக் ஜெர்மனியுடன் சேர வேண்டும் என்றும், கிழக்கு பிரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் போக்கு வரத்திற்காக ஒரு இருப்புப் பாதையும், ஒரு மோட்டார் சாலையும் ஜெர்மனிக்கு ஏகபோக சொத்தாக விடப் படவேண்டும் என்றும், அதற்குச் சம்மதித்தால் போலந்தின் மேற்கு எல்லையை ஒப்புக் கொள்வதாயும், இருபத்தைந் தாண்டுகளுக்கு அனுக்கிரமிப்பு உறுதி கொடுப்பதாகவும், டான்சிக் நகரில் போலந்திற்குரிய பொருளாதார உரிமைகளைக் காப்பாற்றுவதுடன், புது மாறுதலால் விளையக்கூடிய இதர விஷயங்களையும் தாராள மனதுடன் தீர்ப்பதாகவும், தன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அதனைப் போலந்தின் வெளிநாட்டு அமைச்சர் கர்னல் பெக் ஏற்கவில்லை. போலந்து ஏற்கனவேயே ஜெர்மனிக்கு இருப்புப்பாதை விஷயமாகச் சௌகரியம் செய்துக் கொடுத்திருக்கிறது. ஜெர்மானியர் தாய்நாட்டினின்றும் கிழக்குப் பிரஷ்யா செல்ல வேண்டின் எத்தகைய சுங்க அதிகாரிகளின் தொந்தரவுமில்லாமலிருக்க போலிஷ் சர்க்கார் உதவிசெய்து வருகிறார்கள். சமாதான முறையில் பேசினால் தரை மார்க்கத்திற்கும் உதவுவதாகக் கர்னல் பெக் கூறுகிறார். ஆனால் தரை மார்க்கத்தையோ, அன்றி இருப்புப்பாதையையோ ஜெர்மன் சொத்தாக விடுவது சுருக்குப் போட்டுக்கொள்வதற்கொப்பாகுமென்றும் அதற்குத் தயாரில்லையென்றும், கூறிவிட்டார்.

'போலிஷ்காரிடார்' என்பது போமிரேனியா வென்னும் போலந்து மாகாணம். அதன் பால்டிக் கடற்கரை பரப்பு எண்பத்தேழு மைலாகும். அப்பிரதேசத்திலேயே கிட்னியா திகழ்கிறது. சுமார் 6,327 சதுரமைல் பரப்பும் 10 லட்சம் மக்களையும் உடைய பிரதேசம். ஹாலந்து தேசத்தின் பாதி அளவு எனக் கூறலாம். போலந்தின் கடற்கரைப் பிரதேச மாகாணம் இது ஒன்றே. கடல் எல்லை மொத்த எல்லையில் நூற்றுக்கு இரண்டு பங்கேயாகும். ஜெக் ஆக்கிரமிப்பாலும் ஸ்லோவேகியாவிலுள்ள ராணுவச் சலுகையாலும் ஜெர்மன் போலிஷ் பொது எல்லை பெருகிவருகிறது. பலமுறை தன்னைப் பங்கிட்ட ஜெர்மனி தன்னைச் சுற்றி வளைப்பதென்றால் போலந்து எச்சரிக்கையாகவிருக்க வேண்டுமல்லவா? ஆகவே போமார்சில் சலுகை அளிக்க மறுக்கிறது.

1308-ம் ஆண்டிலிருந்தே போமார்ச் என்னும் போமிரேனியா போலந்தின் ஆட்சியிலிருந்து வருகிறது. ஆனால் போலந்தைப் பங்கிட்டபோதுதான் அது ஜெர்மன் ஆட்சிக்குச்சென்றது. அதன் ஆட்சியின்போது அங்கு ஜெர்மானியரைக் குடியேற்ற முயன்றும் அம்மாகாணத்தின் போலிஷ் ஜனத்தொகை பெரிதும் பாதிக்கப்படவில்லை. 1931-ம் ஆண்டு ஜனக் கணிதப்படி அம்மாகாண வாசிகள் போலிஷ்மக்களே. மைனாரிட்டியாகவுள்ள ஜெர்மானியருக்கு வேண்டிய வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஜெர்மனி போலந்துடன் தகராறு செய்யும்போதெல்லாம் அந்நாட்டிற்கு விரோதமாக வரிகளை உயர்த்தியிருக்கிறது. 1925-ம் ஆண்டில் போலந்தின் அரைவாசி வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகம் ஜெர்மனியின் வழியே சென்றது. அவ்வாண்டே வர்த்தகப்போர் துவங்கியது. போலந்திற்குச் சொந்தமாக டான்சிக் துறைமுக மில்லாதிருந்திருந்தால் அன்றே அது ஜெர்மனிக்குப்பணிந்திருக்க வேண்டும். ஜெர்மனிக்கும், ரஷ்யாவிற்கும் அண்டையிலிருப்பதால் போலந்து அந்நாடுகளுடனேயே பெரிதும் வியாபாரம் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் பலமுறை ஜெர்மனி போலந்தைத் தன் இச்சைப்படி நடக்கும்படி செய்ய அதன் மீது வரிப்போர்தொடங்கி வர்த்தகத்தை ஒழிக்க முயன்றபோதெல்லாம் கிட்னியாவும், டான்சிக்குமே வெளிநாடுகளுடன் புது உறவுகொள்ளப் பயன்பட்டன. அதனால் ஜெர்மன் பகிஷ்காரம், போலந்தை அதிகமாகப் பாதிக்கவில்லை. இன்னும் கால்வாசி வர்த்தகம் ஜெர்மனியுடனேயே நடைபெறுகிறது. போலந்து போமார்ச் பிரதேசத்தை இழப்பின் அது வெளி நாட்டு வர்த்தகத்திற்கு முக்கால் பாகத்திற்குமேல் ஜெர்மனியின் உதவியை எதிர்பார்த்திருக்க வேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை.

ஜெர்மனிக்குப் பல்வேறு துறைமுகங்களிருப்பதால் போமார்ச் பிரதேசமும் டான்சிக்கும் அதற்குத் தேவை இல்லை. அவை ஜெர்மனியைச் சேரின் பால்டிக் கடல் ஜெர்மனியின் ஓடையாகிவிடும். போமிரேனியாவே வேளாண்மையில் சிறந்து விளங்குகிறது. அம்மாகாணத்திலிருந்தே போலிஷ் மக்களுக்குக் கடல் மச்சம் கிடைக்கிறது.

ஜெர்மானியர், போமிரேனியா ஜெர்மனியைப் பிளக்கிறதென்று கூறுவதும் உண்மை. கிழக்குப் பிரஷ்யா ஜெர்மானி

யரின் குடியேற்றநாடு. அது சரித்திர பூர்வமான உண்மை. இடையே போலிஷ் மக்களே பெருவாரியாக இருக்கிறார்கள். ஜெர்மானியர் ஊருராகப்போலிஷ் மக்களை பலிகொடுப்பதா? கிழக்குப் பிரஷ்யாவிற்காகப் போலந்தையே ஜெர்மன் ஆதிக்யத்திற்கு உட்படுத்த முடியுமா? இன்று கிழக்குப் பிரஷ்யாவிற்கும், ஜெர்மனிக்கும் சென்றுவர தடைகள் யாதொன்றுமில்லை. இரு பிரதேசங்களிலுமுள்ள பிரயாணிகளில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதுபேர் போலிஷ் இருப்புப்பாதையையே உபயோகிக்கிறார்கள். அம்மாதிரியே சாமான் போக்கு வரத்து மிருக்கிறது. எனினும், ஹிட்லர் தனிப்பாதையும், தனிச்சாலையும் கேட்பது எதற்கு, பதினாறு பாதைகளின் வழியாக இன்று ஜெர்மன் ரெயில் தொடர் ஜெர்மனியினின்றும் கிழக்குப் பிரஷ்யா செல்ல போலந்து சலுகை அளித்திருக்கிறது. ராணுவ அதிகாரிகளும் செல்ல அனுமதி கொடுத்திருக்கிறது. அத்தகைய சலுகையால் கிழக்குப் பிரஷ்யா ரயில்வே அதிகாரிகளே "காரிடார்" தடை மறைந்து விட்டதெனத் தங்கள் ஆண்டு அறிக்கைகளில் பன்முறை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியினின்றும் போமார்ச் வழியாகக் கிழக்குப் பிரஷ்யாவிற்குச்செல்லும் சரக்குகளைவிட இதர போலிஷ்மாகாணங்களின் வழியாகச்செல்லும் சரக்குகளின் தொகை இரட்டிப்பு என்பது கவனிக்கத்தக்கது.

போமிரேனியாவைப் "போலிஷ் காரிடா"ரென்று பிறர் அழைப்பதைப் போலந்து வெறுக்கிறது. போமிரேனியா இயற்கையான பிரதேசம். போலிஷ் மக்கள் வாழும் பிரதேசத்தையே ஒட்டியிருக்கிறது; போலிஷ் வர்த்தகம் பெரும்பாலும் அம்மாகாணத்தின் வழியே நடைபெறுகிறது; கிழக்குப் பிரஷ்யா என்றும் ஜெர்மனியுடன் சேர்ந்திருந்ததில்லை. அது ஜெர்மனியின் காலனி, கனடா, சுவிஜர்லந்து முதலிய நாடுகளில் சில பிரதேசங்களில் உள் நாட்டிலிருக்கும் சில தேசங்களிலிருந்து சில பட்டிணங்களுக்குச் செல்ல அண்டையிலிருக்கும் அந்நிய நாட்டு வழியே செல்ல வேண்டி யிருப்பது போலவே ஜெர்மனியிலிருந்தும் கிழக்குப் பிரஷ்யா போகப் போமார்சைக் கடக்கவேண்டும். கடல் மார்க்கமாகச் சென்றால் அந்நியர் பிரதேசத்தில் செல்லாமலே பால்டிக்கடல் வழியாகச் செல்லலாம்.

போமார்சில் ஜெர்மனிக்குப் போக்குவரத்தொன்றிற்கே தடையெனக் கூறலாம். ஆனால் அது போலந்திற் கில்லாவிட்டால் அந்நாடே ஜெர்மனியின் அடிமையாகிவிடும்.

1938-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி ஹிட்லர் "ஜெர்மன் பாராளு மன்றத்தில் போலிஷ் சர்க்காரும், டான்சிக் அதிகாரிகளும் தங்கள் தங்களுக்குள்ள உரிமைகளை மதித்து நடந்துகொண்டு வருகிறார்கள். அந்நியர் அவர்களுள் சச்சரவுகளை விளைவிக்க முயன்றும், இரு திறத்தாரும் ஒத்துழைத்து வருவது பாராட்டத்தக்கது" என்று கூறியவர் இன்று சொல்லுவதென்ன? அன்று ஆஸ்திரியாவைப் பறிக்கவும், ஜெக் நாட்டை ஒழிக்கவும் போலந்தின் உறவு வேண்டியிருந்தது. காரியமானதும் மென்னைப்பிடி என்பது போன்று, இப்போது போலந்துமீது பாய்கிறார். கர்னல் பெக் டான்சிக் விஷயமாக ஒருமுடிவுக்கு வரவேண்டுமென அவரோடு ஒத்துழைத்த நாளெல்லாம் "தகராறு ஒன்றுமில்லாதபோது அதைப்பற்றி பேசியென்ன" எனத் தட்டுக்கழித்தார். இப்போது கடுபிடியாகத்தம் சொற்படி கேட்கும்படி அவரை வற்புறுத்துகிறார்.

ஹிட்லர் கேட்கிறபடி டான்சிக்கில் தனக்குள்ள உரிமையைப் போலந்து விட்டுக் கொடுக்கப்போவதில்லை. இருப்புப்பாதையையோ அன்றி சாலையையோ ஜெர்மனியின் ஏகபோக ஆதிக்யத்திற்கு விடப்போவதில்லை. விட்டுக்கொடுத்தால் ஹிட்லர் அளிக்கும் சலுகை என்ன? மேற்கு எல்லையை ஒப்புக் கொள்ளுகிறாராம். அது சலுகையா? இருப்பதை அவரென்ன மறுக்கிறது. தன் வேண்டுகோளுக்கு

இணங்காவிட்டால் "மேலும் பிரதேசங்களைப்பறிப்பே" னெனப் பயமுறுத்துகிறுர் போலும். பத்தாண்டு அனுக்கிரமிப்பு ஒப்பந்தத்தை ஐந்தாண்டிலேயே ஒழித்தவர் புது ஒப்பந்தத்தை நிறைவேற்றுவாரென்று எப்படி நம்பமுடியும், டான்சிக்கை இழந்தால் போலந்தின் வர்த்தகம் அழியுமாதலால் கர்னல் பெக் ஹிட்லர் கோரிக்கை ஒருதலைபட்டதெனக் கூறிப் புறக்கணித்துவிட்டார். போலந்தின் சுதந்திரத்திற்கும், வர்த்தகத்திற்கும் போமார்ச் அவசியமென்றும், டான்சிக் அதன் பக்கபலமென்பதையும் அறிந்தே போலந்து புறக்கணித்துள்ளது. பம்பாய்போலிஷ் கான்சல் டாக்டர் யூஜீன் பெனுசின்ஸ்கி கூறியபடி இந்தத் தகராறில் "மியூனிச்" சாத்தியமில்லை. அதுவே போலந்திற்குப் படிப்பினையாக விருக்கிறது. பிற நாடுகள் வராவிடினும் தனித்தே எதிர்க்கத்தயார். அங்கிலை நேருமென்றே தீர்க்கதரிசி போன்று தளபதி பிலுடுஸ்கி நாடு நிறுவப்பட்ட நாள் தொட்டே ராணுவம் பலத்திருக்க வேண்டுமெனச் சர்க்காரின் வருவாயின் பெரும் பாகத்தை அதற்கே செலவிட்டார். அது முதல் தரமாயிருப்பதுடன் இன்று ஹிட்லரை எதிர்க்கவும் தயாராயிருக்கிறது. வியன்னுவில் துருக்கியரையும், விஸ்துலாவில் சோவியத்தையும் ஐரோப்பாவிலிருந்து வெருட்டியது போன்று இன்று அந்நாடே நாஜி முறையையும் ஒழிக்கும் பெருமையைக் கொள்ளலாம்.

---

# பக்தி

டான்சென் ஒரு சமயம் தனியாக காட்டில் பாடிக்கொண்டிருந்தபொழுது அக்பர் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அவனிடம் சென்று, 'என்ன, நீ இவ்வளவு அழகாக என்னிடத்தில் பாடியதேயில்லையே' என்று கேட்டார்.

அதற்கு அவன், "எப்படிமுடியும்? நான் இதுவரையில் உங்களைக் காட்டிலும் பன்மடங்கு பெரியவரும் என் உள்ளத்தைக் கவர்ந்தவராயுமுள்ள ஒருவரைக் குறித்துப் பாடிக்கொண்டிருந்தேன்" என்ருன்.

அக்பர் "என்னையும் விடப் பெரியவரா? அவர் யாராயிருக்க முடியும்?" என்று வினவினர்.

டான்சென் "அவர்தான் கடவுள். என் உள்ளத்தை கொள்ளை கொண்டவர். நான் உங்களிடத்தில் பாடும்பொழுது, உங்களுடைய கட்டளையின்பேரில் பணத்துக்காகப் பாடுகிறேன். அதனுல் என்னுடைய மனது முழுவதையும் அப்பாட்டில் செலுத்துவதில்லை. ஆனுல் லோககர்த்தாவாகிய கடவுளுக்காகப் பாடும்பொழுது நான் மனப்பூர்த்தியாக கானத்தில் ஈடுபடுகிறேன்" என்ருன்.

—அமிருத சந்தேஷம்.

---

# மோதிரமும் பேசிரியும்

(ஸ்ரீ வி. ஆர். சுந்தரராமன், எம். ஏ.)

"கிளப்பில்" சீட்டாடுவதற்காகக் கூடும் கோஷ்டியில் சீனுவின் மாதிரியே அலாதி. மற்றவர்களைப்போல் படாடோபம் கிஞ்சித்தேனும் அவனிடம் கிடையாது. குணத்திலோ தங்கக் கட்டி தான். உரக்கப் பேசவேமாட்டான். தான் பேசும்போது எதிராளிக்கு மனம் நோகாமல் பார்த்துக்கொள்ளுவான். பார்வைக்கும் பசுபோல் பரம சாதுவா யிருப்பான். ஆனால் முகத்தில் மட்டும் 'குறு குறு' வென்று ஒரு களை. இவ்வளவு நல்ல குணங்களும் படிந்திருந்த படியால் "கிளப்பில்" இவனுக்கு எல்லோரும் நண்பர்களாயும் ஒருவர்கூட விரோதியில்லாமலு மிருந்ததில் ஆச்சரிய மில்லை.

சீனுவிற்கு வாழ்க்கையில் ஒருவித ஆசையுங் கிடையாது. சாப்பாட்டு விஷயத்தில் எதைப் போட்டாலும் ருசி கூட சரிவரப்பார்க்காமல் சிவனே என்று, உட்கார்ந்ததுகூட தெரியாமல் சாப்பிட்டு விட்டு எழுந்து போய்விடுவான். இலையின்முன் உட்கார்ந்துகொண்டு 'இது சொத்தை' 'இது சொள்ளை' என்னும் பழக்கம் இவனுக்கு கிடையவே கிடையாது.

உடைகள் விஷயத்திலும் இந்தப் படியே. பகட்டான ஆடைகளை அணிய வேண்டுமென்ற ஆசை அவனுக்கு, லவலேசமும் கிடையாது. இன்னும், 'ஸினிமா' 'டிராமா' முதலிய இதர விஷயாதிகளிலும் இதே தினுசு. "கிளப்புக்"குப் போய் சில சமயம் பணம் வைத்துக் கடுதாசி ஆடுவது வெறும் கால ஹரணத்தை உத்தேசித்தே.

ஆனால் தன் மனைவி ருக்கு விஷயத்தில் மட்டும் இதற்கு நேர் மாறாகவே நடந்து வந்தான். அவள் வீட்டிலிருக்கையில் கூட நல்ல பட்டுப் புடவைதான் கட்டிக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் பளிச்சென்று முகத்தை வைத்துக்கொள்ள அவளுக்குச் சளைக்காமல் 'ஸோப்பு', 'பௌடர்', 'ஸ்னோ' முதலிய தற்காலத்திய நாகரீகப் பொருள்களை வாங்கித் தருவான். நகைகள் விஷயத்தில் மட்டும் அவன் கொஞ்சம் சிக்கனம் பிடிப்பான். ஏனென்றால் ஸ்திரீகளை நகை "ஸ்டாண்டாக" ஆக்குவதில் அவனுக்கு நம்பிக்கை யில்லை. அழகென்பது இயற்கையாகவே அமைய வேண்டுமே யொழிய செயற்கையால் உண்டாக்கப்படுவதன்று என்பது அவனது தீவிரமான கொள்கை. இருந்தாலும் ருக்குவின் தொந்தரவின்பேரில் கச்சிதமாய் கையில் நான்கு வளையல்கள், கழுத்தில் மூன்று வடத்தில் சங்கிலி யொன்று, காதில் அதிக மட்டமும் அதிக உயர்ந்ததுமில்லாத ஒரு ஜதை வைரக்கம்மல்கள், வலப்பக்கத்தில் மட்டும் ஒரு மூக்குத்தி, இவைகளை அவன் பண்ணிப் போட்டிருந்தான். இதுகூட அவனுடைய அந்தஸ்திற்குச் சற்று அதிகப்படி தான். ஆனால் கால் பங்கு ருக்குவின் பிடிவாதமும், முக்கால் பங்கு அவள் பேரில் அவனுக்கிருந்த பிரேமையும் அவனை இதற்கு இணங்கச் செய்தன.

நகை விஷயத்தில் ருக்கு பிடிவாதம் செய்ததற்கு வேறு ஒரு காரணங்கூட உண்டு. அவளுடைய அக்காள் இந்த ஆபரணங்களை யெல்லாம் பூட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்கு விட்டுக்கொடுக்க இவளுக்கு மனது வராதது சகஜந்தானே. ஸ்திரீகளுக்குள்—அதிலும் அக்காள் தங்கைகளுக்குள்—இந்தப்போட்டி அதிசயமில்லை யல்லவா? ஆனால் தன்னுடைய அத்திம்பேர் சீனுவைவிட உயர்ந்த பதவியிலிருந்ததை அவள் முற்றிலும் மறந்தாள்.

இவ்வளவெல்லா மிருந்தும் ருக்குவிற்கு ஒரே ஒரு குறை. இடது மூக்கில்

ஒரு எட்டுக்கல் வைரபேசரி தன் அக்காளைப்போல் தானும் போட்டுக்கொள்ள வேண்டுமென்று அவளுக்கு நெடுநாளாய் ஒரு கோரிக்கை. ஆனால் சீனு இதற்குக் கொஞ்சங்கூட இடங்கொடுக்க வில்லை.

நல்ல மரத்தில் ஒரு புல்லுருவிபோல் இவ்வளவு நல்ல குணங்களுக்கிடையில் சீனுவுக்கு ஒரு நாள் ஒரு விபரீத ஆசை ஏற்பட்டது. தன் வலதுகை பவித்திர விரலில் ஒரு வைர மோதிரம் செய்து போட்டுக்கொள்ள வேண்டுமென்று அவன் விரும்பினான். மற்ற விஷயங்களில் சங்கியாசிகள் கூட பிச்சை வாங்கும் ஸ்திதியிலிருந்த இவனுக்கு இந்த ஆசை எப்படி வந்ததென்று இவனுக்கே தெரியவில்லை. எங்கேயோ யாரோ ஒருவன் கையில் அத்தகைய மோதிரமொன்றை யணிந்து மினுக்கியதைக் கண்டான். உடனே தானும் அம்மாதிரி ஒன்றை அணிந்துகொள்ளவேண்டுமென்று விருப்பங் கொண்டான். அதைப் போட்டுக் கொண்டு ஒருநாள் முழுவதும் அவஸ்தைப் படவேண்டுமென்று அவன் தலையில் எழுதியிருந்ததே. விதி யாரை விடும்!

இந்த எண்ணம் தோன்றிற்றோ இல்லையோ தன் சிலவுகளில் சிக்கனம் பிடித்து மோதிரத்திற்காக நிதி சேர்க்க ஆரம்பித்தான். ரூபாய் நூறு சேர்க்க அவனுக்கு ஒரு முழுவருஷம் ஆயிற்றென்றால் அதற்காக அவன் எவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டுமென்று நீங்களே தெரிந்துக் கொள்ளுங்களேன்.

ரூபாய் நூறு சேர்ந்ததும் ஒரு நாள் காலையில் "விராஜ்மல்ஸா"க்குப் போனான். விரலுக்குத் தகுந்த வீக்கமாய் ஒரு மோதிரத்தைப் பொறுக்கி எடுத்தான். இருந்தாலும் உடனுக்குடன் அதற்கு முழுப்பணமும் கொடுத்துவிட அவன் மனது இடங்கொடுக்கவில்லை. பனிரெண்டு மாதங்கள் உழைத்து சேர்த்த பணமல்லவா? பக்கத்தில் ஒருவர் வேறு நகையொன்றை "ஆன் அப்புரூவலாக" (அதாவது 'பரிசோதனை'யாக) எடுத்துக் கொள்ளுவதைப் பார்த்தான். கொட்டிக் கொடுக்கும் பணத்தை இரண்டு நாள் கழித்துதான் கொடுப்போமே என்று எண்ணிக்கொண்டு தானும் 'ஆன் அப்புரூவலா'கவே அதைப் பேசி எடுத்துக்கொண்டு கடையை விட்டுக் கீழே இறங்கினான்.

மோதிரத்தை விரலில் போட்டுக்கொண்டு நான்குமுறை அதை அப்புறமும் இப்புறமும் திருப்பிப்பார்த்தான். தன் விரலுக்கு ஏன், கைக்குக்கூட— ஒரு புது சோபிதம் ஏற்பட்டதாக அவனுக்குத் தோன்றிற்று. இதை முதன் முதலில் யாரிடம் காட்டுவது? வீட்டிற்குப் போவதற்கோ சற்று பயம். ஏனெனில் பேசிரி வாங்க இல்லாத அந்தஸ்து மோதிரத்திற்கு மாத்திரம் எங்கிருந்து வந்துவிட்டது, என்று ருக்கு ஒரு உலுக்கு உலுக்கினால் என்ன செய்வது என்ற பயம் ஒருபக்கம். ஆகையால் நேராகக் 'கிளப்பை' நோக்கி நடையைச் செலுத்தினான்.

லீவு நாளானபடியால் கிளப்பில் இவன் போன சமயத்தில் நல்ல கூட்டம் இருந்தது. இவன் உள்ளே நுழைந்த சிறிது நேரத்திற் கெல்லாம் இவனுடைய புது மோதிரத்தை அக்கூட்டத்தில் பலர் கவனித்து விட்டனர். அத்தகைய கூட்டமொன்றில் வம்பிற்குத்தான் கேட்க வேண்டியதில்லையே. அவர்களில் ஒருவன் சீனுவை நோக்கி, "ஏண்டா, சீனு, ஏதுடா இது? நீ கூட நகை நட்டில் இறங்கிவிட்டாய்! என்ன சமாசாரம்?" என்றபொழுது இவன்முகம் அசடுதட்டவாரம்பித்துவிட்டது.

"இல்லே, ஏதோ போட்டுக்கொள்ளணும்னு ரொம்ப நாளா ஆசை. இப்பொழுதுதான் சமயம் வாய்த்தது" என்றான் சீனு பல்லைக்காட்டிக் கொண்டே.

இன்னொருவன் "பலே, அதான் நான் என்ன மோன்னு பாத்தேன். என்னடா இது ஒரு நாளுமில்லாமல் இவ்வளவு சீக்கிரம் காலைவேளையில் வெகு சிரத்தையுடன் 'கிளப்புக்கு' வந்ததோடில்லாமல் அப்படியும் இப்படியுமாய் நாலு நாழியாய் கையைத் தூக்கிண்டும்

தாழ்த்திண்டும் இருக்கானேன்னு பாத் தேன்'' என்ருன் ஒரு கவட்டுச்சிரிப் புடன்.

மூன்ருவது பேர்வழி ஒருவன், கண்ணை ஒரு சிமிட்டு சிமிட்டிக்கொண்டு, 'அதெல்லாம் இருக்கட்டும்; போயும் போயும் இதிலே என்னடா உனக்கு ஆசை போச்சு? நீ என்னமோ ஸ்திரீ களுக்கே நகையே கூடாதென்று பேசின சீர்திருத்தப் பேச்செல்லாம் வாய் வேதாந்தந்தானு?'' என்ருன்.

இன்னெருவன் "சே, இருங்கடா. எப்படி யிருக்குன்னு பார்க்கலாம். சீனு, எங்கே, அதைக் கொஞ்சம் எங் கிட்டே காட்டு'' என்ருன்.

வேருெருவன் "அவன்தான் ஏதோ தெரியாமல் இதை வாங்கி வந்து விட் டான்னு இப்படித்தான் அவனை இறக்குகிறதா? சீனு, இவாளெல்லாம் என்ன வேணும்னு சொல்லிண்டு போகட்டும்; நீ பாட்டுக்கு ஜம்னு போட்டுண்டிரு'' என்று சற்று பரிந்து பேசினன்.

இன்னெருவன் "அடே, ஏண்டா அவன் பிராணனை வாங்குகிறீர்கள். சிவ னேன்னு அவன் அதைக்கொண்டு போய் வாங்கின கடையிலேயே இரண் டாம் பேருக்குத் தெரியாமல் திருப் பிக்கொடுத்து விடுவாண்டா'' என்ருன்.

பேச்சு மேலும் மேலும் இந்த தினுசி லேயே முற்றிக்கொண்டு வருவதைக் கண்டு தனக்குள் "அடராமா'' சொல்லி யவண்ணம் சீனு 'கிளப்பை' விட்டு வில கினன்.

அடுத்தாற்போல் பல சரக்குகள் விற் கும் ராமய்யரின் மளிகைக் கடைக்குப் போனன். அங்கேயும் இவனுடைய துர் அதிர்ஷ்டம் இவனை எதிர்கொண்டழைக் கவேணுமா? கடையில் கூட்டம் போட் டுக்கொண்டிருந்த ஐந்தாறு பேர்வழிக ளும் இவனுக்குத் தெரிந்தவர்களே. 'கிளப்பி'லிருந்தவர்கட்குப் பின் வாங்கா மல் இவர்களும் இவனுடைய மோதி ரத்தைக் குறித்துப் பேசவாரம்பிக்கவே வாயைத் திறக்காமல் கடையை விட்டு நழுவினன்.

அதற்கப்புறம் எங்கு செல்லுவ தென்று அவனுக்குப் புலப்படவில்லை. எதிரில் ஒரு மயிர் வெட்டும் கடையைக் கண்டான். சமீபத்தில்தான் தன்னு டைய மயிரை வெட்டிக்கொண்டான். ஆகையால் இப்பொழுது அங்கு போக வேண்டிய அவசியம் அவனுக்கில்லை தான். ஒருக்கால் அங்கேயாவது சிறிது நேரம் நிம்மதியா யிருக்கலாமென்று நினைத்து அவன் அக்கடைக்குள் நுழைந் தான். உள்ளே போய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டதுதான் தாமதம், சோதனையாக அவனுக்கு அடுத்த நாற் காலியில் அவனுடைய நண்பன் சுப்புணி வந்து உட்கார்ந்து கொண்டான். அன்று காலை அவனுக்குக்கிடைத்த ஏமாற்றத்தி னல் உண்டான தலைவலியின் பாதையைக் குறைக்க அகஸ்மாத்தாய் சீனு தன்னு டைய வலது கையினல் தலையை அழுத் திப் பிடித்துக்கொண் டிருந்தான். சுப் புணி மோதிரத்தைப்பார்த்து விட்டான்.

"சரிதான், ஏது நீகூட ஆரம்பித்து விட்டாய்? எத்தனை நாளாய் இந்த மைனர் விளையாட்டுகள்?'' என்று தொடங்கி மேன்மேலும் அடுக்கிக் கொண்டே போனன். என்ன பாபம் செய்தானே சீனு!

"இது என்னுடையதில்லையப்பா, இர வல். வெளியூருக்குப் போயிருக்கும் நண்பர் ஒருவர் அவர் வரும்வரையில் இதை என்னிடம் ஒப்புவித்திருக்கிருர்'' என்று ஒரு சிறிய பொய்யைச் சொல்லி, அவன் வாயை அடக்கினன்.

கடைசியில் மோதிரத்தைக் கடையி லேயே கொண்டுபோய 'வாபீசு' செய்து விட்டுத்தான் வீட்டிற்குப் போவ தென்று தீர்மானித்தான். அவன் வாங் கிக்கொண்டு வந்ததென்னமோ 'ஆன் அப்புரூவல்' தானே. ஆனல் அப்படி வாங்கும் நகைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமானல் அவைகளுக்குப் பதிலாக வேறு நகைகள் ஏதாவது வாங்கித்தான் ஆகவேண்டுமென்பது "விராஜ்மல்''ஸில்

ஒரு நிபந்தனை என்று தான் வாங்கும் போது கடைக்காரன் சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது. எப்படி யிருந்தாலும் மோதிரத்தை மட்டும் கட்டாயம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது தான் என்று உறுதி கொண்டவனாய் "விராஜ்மல்ஸ்" கடையை நோக்கி நடந்தான்.

பின்னும் அரைமணி நேரத்திற்கெல்லாம் தன் வீட்டினுள் நுழைந்தவன் நேராகச் சமையல் கட்டிற்குச் சென்று "ருக்கு, இந்தா, ரொம்ப நாளாய் என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தாயே அந்த வைரபேசரி. எங்கே, போட்டுக்கொள். எப்படி யிருக்கிறது என்று பார்க்கலாம்," என்றான் கடைசியில் ஒருவாறு திருப்தி யடைந்தவனாய்.

அதே சமயத்தில் காப்பிப்பொடி கடன் வாங்க வந்த அடுத்த வீட்டு சேஷிப் பாட்டி ருக்குவைப் பார்த்து "பேஷ், இப்போதான் ராஜாத்தியாட்டமா இருக்கு. நன்னா வச்சிண்டிருந்தே ஒரு மூக்கை வெறிச்சுன்னு இத்தனை நாளா" என்று சொன்னதும் இவன் காதில் விழுந்தது.

---


*

# பாரத மணி

தமிழ் நாட்டின் இனிய வாரப் பத்திரிகை

**வருஷச் சந்தா :—**

உள்நாடு ரூ. 4
வெளிநாடு ரூ. 6
} தபால் செலவு உள்பட

தனிப்பிரதி விலை 1 அணா

*




# சுவர்க்கோழி

"கேஸரி"

விந்திய மலைக்கு வட பாகத்தில் சிவாரணியம் என்றொரு விசாலமான காடு இருந்தது. அதில் பல மிருகங்களும் பக்ஷி வகைகளும் ஏராளமாக வசித்து வந்தன.

அக்காட்டின் மத்தியில் சாசுவதர் என்றொரு மகரிஷி தன் பர்ண சாலையை ஏற்படுத்தி வசித்து வந்தார். அவர் ஒரு பழுத்த தவசி. ஜீவகாருண்யம் உள்ளவர். ஆனால்மிகுந்த கோபிஷ்டர். அவர் கோபத்தால் சாபமடைந்தவர்கள் பலர்.

அவருக்கு கோரா என்றொரு மகள் இருந்தாள். அவள் அவருடைய சொந்த மகள் அல்ல. ஒரு நாள் தர்ப்பை எடுத்துக்கொண்டு வருவதற்காகப் பர்ணசாலைக்கு வெகுதூரத்திலுள்ள ஓர் மடுக்கரைக்குச் சென்ற போது அங்கு கண்டெடுக்கப்பட்ட குழந்தை அவள். அந்த அமானுஷ்யமான பிரதேசத்தில் அந்தச் சிறு குழந்தை இருந்ததைக்கண்டு அதைக் காப்பாற்ற வேறு யாரும் அங்கு இல்லாததால், தானே அவளை வளர்க்க நிச்சயித்துத் தன் ஆசிரமத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார்.

குழந்தை நாளுக்கு நாள் மிகுந்த பலசாலியாக வளர்ந்தாள். வனத்திலுள்ள மிருகங்களுடன் பயமில்லாமல் விளையாட ஆரம்பித்தாள்.

ஐந்து வயது பெண்குழந்தை காட்டு மிருகங்களுடன் விளையாடுவதென்றால் அது மிகவும் கோரக் காட்சி அல்லவா? அதனால்தான் அவர் அவளுக்கு கோரா என்று பெயரிட்டு அவளை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தார்.

ஆனால் மகரிஷிக்கு மாத்திரம் இக்குழந்தையின் சுபாவம் ஆச்சரியத்தை யளித்தது. தான் ஜீவகாருண்யத்துடன் இருக்கும் நற்குணத்தை யறிந்துதான் கடவுள் சந்தோஷப்பட்டு இக்குழந்தையைத் தன்னிடம் அனுப்பினாரோ என்று கூட சந்தேகப்பட்டார்.

ஒரு நாள் இரவு நிலவுகாய்ந்துகொண்டிருந்தது. தென்றல் காற்று சுகமாக வீசிக்கொண்டிருந்தது. கோரா "தாதா, நான் ஒன்று கேட்கிறேன் கொடுப்பீர்களா" என்று கேட்டாள்.

சாசுவதர் அது வரையில் கோரா அவ்வளவு கெஞ்சலான வார்த்தைகளைச் சொல்லிக் கேட்டதே இல்லை. ஆகையால் உடனே "கோரா, உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன்; நீ பயப்படாதே கேள்" என்று சொன்னார். உடனே சிறு பெண் எழுந்து நின்று கொண்டு மஹரிஷியை நோக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு மிகவும் வணக்கத்துடன், "எனக்கு இயற்கையாயுள்ள மரம் செடிகளிடத்திலும், காட்டு மிருகங்களிடத்திலும் அதிகப் பிரியம். தாவரங்களைத்தான் இங்கு அபரிமிதமாகக் காண்கிறேன். மனித சஞ்சாரம் இருப்பதால் மிருகங்கள் மாத்திரம் அதிகமாக இங்குவருவதில்லை. எப்படியாவது உலகத்திலுள்ள மிருகங்களில் ஜாதிக் கொன்று வீதமாவது இங்கு வளர்க்க வேண்டும். எனக்கு அப்பொழுதுதான் திருப்தி" என்று சொல்லி நமஸ்கரித்தாள்.

மகரிஷி மனம் தவித்தது. ஜீவகாருண்யம் படைத்தவர். ஜீவன்களை விடுதலை

யில்லாமல் ஒரே இடத்தில் வெகு நாட்கள் வைத்துக்கொண்டு இருக்கலாமா? அப்படி இருந்தால் அவற்றின் இயற்கை வாழ்க்கை போய்விடுமல்லவா? அதனால் ஒன்றும் தோன்றாமல் திகைத்தார். ஆனால் வாக்குறுதி கொடுத்துவிட்டாரே, அதைத் தவறி நடக்கலாமா? ஆசைக் குழந்தையையும் திருப்தி செய்ய வேண்டுமல்லவா?

"அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"உங்கள் மனதை நான் அறிவேன். அதற்கு நான் ஒரு வழி சொல்லுகிறேன்" என்று புத்திசாலித்தனமாக பதில் சொன்னாள்.

உடனே மகரிஷி, "என்ன வழி?" என்று ஆவலுடன் கேட்டார்.

"இந்தக் காட்டில் வேடுவர்கள் வேட்டையாடுகிறார்கள் என்பதை அறிந்தேன். அவர்களுக்கு நான் வேண்டிய தனம் கொடுக்கிறேன். அவர்கள் வேட்டையாடிப் பிடித்த மிருகங்களைக் கொல்லாமல் என்னிடம் கொண்டுவந்து விட்டு விடும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மிருகங்களும் கொல்லப்படுவதில்லை. வேடுவர்களும் பொருள் பெறுகிறார்கள். நானும் மிருகங்களை அதிகமாக இங்கு வளர்க்கலாம்" என்றாள்.

"உனக்கு தனமேது?" என்று வியப்புடன் கேட்டார் மகரிஷி.

"அதை மாத்திரம் சொல்ல முடியாது, மன்னிக்க வேண்டும்" என்று பதிலளித்தாள்.

மகரிஷிக்கு அதற்குமேல் அவளை வற்புறுத்த மனமில்லை. ஆகையால் அவள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்தார். தன் தபோமகிமையால் பர்ணசாலைக்கருகில் சுற்றுச் சுவருடன் சேர்ந்த ஒரு மைதானத்தை ஏற்படுத்தினர்.

வேடுவர்கள் மிருகங்களைக் கொணர்ந்து விடும்படியும் ஏற்பாடுகள் செய்தார். மைதானத்தில் நூற்றுக் கணக்கான மிருகங்கள் சேர்ந்தன.

தகுந்த ஆகாரமில்லாமல் மிருகங்கள் அடைபட்டிருப்பதைப் பற்றி வருந்தி கோராவிடம் ஒவ்வொன்றையும் கொஞ்ச நாட்கள் வைத்துக்கொண்டு விடுவித்து விடும்படி கேட்டுக்கொண்டார். கோராவும் ஒத்துக்கொண்டாள்.

பிரதி தினமும் மிருகங்கள் வேடுவர்கள் மூலம் வந்துகொண்டே இருக்கும். விடுதலை ஆய்க்கொண்டே இருக்கும். வேடுவர்கள் பரிபூரணமாக தனத்தைப் பெற்றுக்கொண்டு சந்தோஷத்துடன் வீடு செல்வார்கள்.

ஒவ்வொரு இரவும் மறுநாட் காலையில் விடுவிக்க வேண்டிய மிருகங்களைப் பற்றி கோரா மகரிஷியிடம் தெரிவிப்பாள். அதன்படியே அவைகள் விடுதலை பெறும்.

இப்படி அடைபட்டிருந்த மிருகக் கூட்டத்தில் கோழி ஒன்று. பாவம் ஆறு மாதங்கள் ஆயும் விடுதலை யடையாமல் வருந்திக்கொண் டிருந்தது.

அக்கோழி தான் கஷ்டப்படுவதோடு நிற்கவில்லை. மற்ற மிருகங்களுக்கும் உதவி புரிந்து வந்தது. ஒவ்வொரு இரவும் பர்ணசாலை சுவற்றண்டை வந்து கோராவின் பேச்சுகளை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருக்கும். காலையிலெழுந்து எந்த மிருகம் விடுதலை யடைய வேண்டும் என்று அவள் சொன்னாளோ அதனிடம் போய் இந்த சந்தோஷச் செய்தியைச் சொல்லும்.

இப்படி எல்லாவற்றிற்கும் சந்தோஷச் செய்தியைத் தெரிவிக்கும் இக்கோழிக்கு மாத்திரம் விடுதலை கிடைக்கவில்லை என்றால் துக்கம் வாராதா அதற்கு.

ஒரு நாள் இரவு அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருந்தது.

"இன்று புள்ளிமானை விடுவிக்க வேண்டும் அது நம் ஆசிரமத்துக்கு வந்து வெகு நாட்கள் ஆகின்றன. அதற்குப் பதில் வேறொரு மானும் வந்திருக்கிறது" என்றாள் கோரா. அதை மகரிஷி ஆமோதித்தார். கோழிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. படபட வென்று ரக்கைகளை அடித்துக்கொண்டு சுவற்றின் பேரில் ஏறி உட்கார்ந்தது.

வெகு துணிச்சலாக "எத்தனை நாளைக்குத் தான் என்னை வைத்திருக்கப் போகிறீர்கள். எனக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாம் போய்விட்டார்களே" என்று கோபத்துடன் கேட்டது.

கோரா திரும்பி மேலே பார்த்தாள். மகரிஷி சிறிது நேரம் கண்ணை மூடிப் பிறகு திறந்தார். ஞானதிருஷ்டியால் இக்கோழி ஒட்டுக் கேட்டுக் கொண்டு வந்ததை அறிந்து ரிஷி கோராவுக்குத் தெரிவித்தார். உடனே கோழியை நோக்கி கோபத்தில் சிவந்தகண்களுடன் "ஏ, துஷ்ட ஜந்துவே! நீ சுவற்றினருகில் நின்று கொண்டு ஒட்டுக்கேட்டதனால், நீ சுவர்க்கோழியாய்ப் போகக்கடவாய்" என்று சபித்தார். உடனே கோழி சுவர்க்கோழியாகக் கண்ணுக்குத் தெரியாமல் மாறிற்று.

பிறகு தான் பதட்டத்துடன் செய்த காரியத்தை எண்ணி மனம் வருந்தினார். என்ன செய்வது? சாபத்தை மாற்றமுடியாதே.

"நீ சுவர்க்கோழியாகப் போனாலும் யார் கண்ணுக்கும் தென்படாமல் இருந்தாலும், நீ எப்பொழுதும் பசிதாகம் இல்லாமல் ஆனந்தமாக பாட்டு பாடிக்கொண்டிருக்கக்கடவாய். உன் பாட்டு இயற்கைத்தாய்க்கு ஓர் சுருதி போலிருக்கும்" என்று வாழ்த்தினார். அப்படியும் அவர் மனம் அமைதியடையவில்லை. அத்தப்பிதம் செய்த பிறகு தான் உயிருடன் இருப்பது உசிதமல்ல என்று எண்ணி காயக்லேசம் செய்து உயிர் துறந்தார்.

உடனே சுவர்க்கோழி சுவற்றிலுள்ளிருந்து "நொய்" என்று பாட ஆரம்பித்தது.

சாபவிமோசனம் ஆகாமல் இன்னும் சுவர்களில் இது கத்திக்கொண்டிருப்பதைக் காணலாம்.

---

# எங்கே போகிறாய்?

வெளியே போய்விட்டு திரும்பி வந்து வீட்டு வாசற்படி ஏறும்போது தகப்பனரைச் சிறு குழந்தை ராமு நிறுத்தி

"அப்பா நீ எங்கே வருகிறாய்?" என்றான்.

"வீட்டிற்கு வருகிறேன், ஏன் அப்படிக் கேட்கிறாய்" என்று கேட்டார்.

"எங்கேயாவது போகும்போது 'எங்கே போகிறாய்' என்று கேட்கக் கூடாது என்று சொன்னீர்களே, திரும்பி வரும்போது 'எங்கே வருகிறாய்?' என்று கேட்கலாமோ அல்லவோ?" என்றான்.

---

# புத்தக விமர்சனம்

(வேதாந்தம்: ஸ்ரீ. வி. வி. சிந்தாமணி எழுதியது. பிரசுரித்தது: ஹீத், கிரான்டன், லண்டன்.)

ஆங்கிலத்தில் எழுதி பல இந்தியர்கள் சிறந்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். தோருல்தாதத் முதல் பலர் வெகு திறமையுடன் அந்தப் பாஷையின் நுணுக்கங்களை அறிந்து கையாண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ வி. வி. சிந்தாமணி எழுதியிருப்பது ஒரு சமூக நாவல்; ஆங்கிலத்தில் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் கூட சில பாகங்கள் நடைபெறுகின்றன.

நவ நாகரிகத்தின் அடிமையான ஸர் நரசிம்மடித்தின் பெண் கமலா இந்திய நாகரீக முறையே மேலானது என்று அதைக் கடைப்பிடிக்கிறாள். பாலிய விதவை சம்பக் சீமை சென்று படித்து பல கண்டும் கேட்டும் உணர்ச்சி குன்றாது வேதாந்தத்தை ஆதிமுதல் நேசிப்பது உருக்கமாகவே இருக்கிறது.

வேதாந்தத்தின் பெற்றோர்கள் அசல் தென்னிந்திய வைதிகப் பிராமண தம்பதிகள். ஆனால் அவர்கள் கமலாவிடம் ஈடுபடுவது கவர்ச்சியாக இருக்கிறது.

வேதாந்தமோ உணர்ச்சி உருவம். உணர்ச்சியே அவனை உருக்கொடுத்து நடமாடச் செய்கிறது; உணர்ச்சியாலே மாய்கிறான்.

இதுவொரு சிறந்த நாவல்.

கு. ப. ரா.

கீழ்க்கண்ட சென்னை சிந்தாதிரிப்பேட்டை லோகோபகாரி பிரசுரங்கள் வரப்பெற்றோம்.

(1) உபதேசமாலை:-லோகோபகாரியில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்ட சுவாமி சிவானந்தரின் ஆங்கில உபதேசங்களின் மொழி பெயர்ப்புகள் எல்லாம் ஒன்று சேர்த்துப் புத்தகமாக வெளியிடப் பட்டிருக்கிறது. நல்வழி புகட்டுவதில் சிறந்தது. விலை அணா 4.

ராதாராணி:—பங்கிம் சந்திர சட்டர்ஜியின் சிறு கதை. மொழிபெயர்ப்பு இனிய தமிழில் அழகாகச் செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்த்தவர் ஸ்ரீ பரலி, சு. நெல்லையப்பர். விலை அணா 3.

(3) ஜோடி மோதிரம்:—பங்கிம் சந்திர சட்டர்ஜியின் வங்காளிச் சிறுகதை. மொழிபெயர்த்தவர் பரலி. சு. நெல்லையப்பர். விலை அணா 4.

(4) பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள்:—"பெருந்தவப் பெரியோனாகி, ஆண்டவன் அருட்காட்சியில் அனவரதமும் ஈடுபட்டிருக்கும் பகவான் அரவிந்தர் பல ஆண்டுகளுக்கு முன்னர் தமது பத்தினியாருக்கு எழுதிய அரிய கடிதங்களை" இப்பொழுது மூன்றாவது முறையாக புத்தகவடிவில் வெளியிடப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

---




## விவசாயக் குடியேற்றம்

நம் ராஜதானியில் ஒவ்வொரு வருஷமும் 15,000 பிள்ளைகள் ஸ்கூல் பைனல் பரீக்ஷை பாஸ் செய்கிறார்கள். இன்டர்மீடியட்டில் சுமார் 3000 முதல் 4000 வரை மாணாக்கர்கள் தேரிவருகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் குறைந்தது 1500 பேர்களாவது கலாசாலை பட்டதாரிகளாகிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் வேலைகிடைக்கிறதில்லை. ஏனென்றால் இங்கு அவ்வளவு பேர்களுக்கும் வேலை கொடுக்கமுடியாமல் இருக்கிறது. பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் பரீக்ஷையில் தேரி வேலைக்கு லாயக்கென்று எடுக்கப்பட்டவர்களுக்குக்கூட வேலை கிடைக்கிறதில்லை.

நம் மாணவர்களுக்கு தைரியமும், எவ்வித கஷ்டத்தையும் அனுபவிக்கத்தயாராயிருக்கும் தன்மையும் இல்லை. நான் மலேயா தேசத்துக்குப் போயிருக்கிறேன். அங்கு படித்தவர்கள் கஷ்டப்படாமல் நன்றாக சம்பாதித்து வாழ்வதைப் பார்த்திருக்கிறேன். அது ஏனென்றால், அவர்கள் முதலிலேயே ஒரு உத்தியோக நோக்கத்தைக்கொண்டு அங்கு செல்லவில்லை. தெய்வீகமாக என்ன வேலை கிடைத்ததோ அதிலேயே அமர்ந்து நோக்கத்துடன் வேலை பார்க்கிறார்கள். அத்தன்மை நம் யௌவனர்களுக்கும் வேண்டும். படித்தவர்களில் வேலை கிடைத்தவர்கள் மாத்திரம் விவசாயத்தொழிலைப் பற்றி எண்ணாமல் அவ்வழியிலே தங்கள் வேலையைக் கவனிக்கட்டும். ஆனால் ஒருவன் விவசாயியாக உத்தேசித்தால் அவன் தன் சரீர பலத்தையும் புத்தியையும் உபயோகிக்க வேண்டும்.

பஞ்சாப் மாகாணத்தில் அநேகம் படித்தவர்கள் சர்க்காரால் கொடுக்கப்பட்ட நிலங்களை உழுது பயிர்செய்து வருகிறார்கள். படித்தவர்கள் நிலங்களை உழுது சாகுபடிசெய்து, ஆறு மாதகாலத்திற்குள் சர்க்கார் தங்களுக்குக் கொடுத்த கடன் தொகையைத் திருப்பிக் கொடுத்தும், அழகிய வீடுகள் கட்டிக்கொண்டும் சுக வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். பஞ்சாப் சலாசாலைப் பட்டதாரிகள் அவ்விதம் மேம்பாடடையும் சக்தி வாய்ந்திருந்தால், சென்னையிலிருப்பவர்களும் அதேமாதிரி இருக்கமுடியும். சிலர் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இப்பொழுது நடை முதலிலிருக்கும் படிப்புத் திட்டத்தையே மாற்றவேண்டும் என்று அபிப்ராயப்படுகிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால், இப்பொழுது நம் நாட்டிலுள்ள அநேகம் பெரிய மனிதர்கள் இந்தப் படிப்பைத்தான் படித்தார்கள். இத்திட்டத்தில் ஒன்றும் தப்பிதம் இல்லை. தவிர இந்தப் படிப்புத் திட்டத்தை மாற்றினால் கூட ஏற்கெனவே படித்து வேலையில்லாமல் திண்டாடுபவர் கதி என்ன? அவர்களுக்கு ஏதாவது செய்துதானே ஆக வேண்டும்.

அண்ணாமலை சர்வகலாசாலையில் படித்தவர்கள் குடியேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட நிலங்களில் வேலைசெய்ய 12பேர்களுக்கு இருவர்தான் விவசாயம் செய்ய முன் வந்தார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் தொகையை முதலாக வைத்துக்கொண்டு அவர்கள் 20ஏகராக்களை சாகுபடி செய்தார்கள். பிள்ளைகள் ஆரோக்கியத்துடனும் புய பலத்துடனும் வசிக்கிறார்கள். ஒருவருஷ பரிசோதனைக் காலத்தில் அவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து ஒரு பைசா கூட பெறவில்லை. அக்குடியேற்றத் திட்டத்தை வேலைசெய்ய அவர்கள் கலெக்டரிடம் சென்று தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்குச் சர்க்கார் தீர்வை போடாமல் இருக்கக் கேட்டுக்கொண்டார்கள். சாகுபடிக்கு தண்ணீர் வசதிகள் பெற்றார்கள். இந்த வருஷத்தில் கலாசாலை நிர்வாகஸ்தர்கள் இன்னும் அதிக பிள்ளைகளைச் சேர்க்க விரும்பிக் கூப்பிடுகிறார்கள். ஆனால் ஒரு சங்கடம். பெற்றோர்கள் பயந்துகொண்டு தங்கள் பிள்ளைகளை அனுப்ப சற்றே யோசனை செய்கிறார்கள். இப்படி சிதம்பரத்தில் நடந்து வரும் திட்டத்தையும் பஞ்ஜாப் மாகாணத்

தில் நடத்திவரும் திட்டத்தையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

—ஸ்ரீ ராமஸ்வாமி சிவன்

## பம்பாய் மதுவிலக்கு

என்ன கஷ்டம் வந்தாலும் காங்கிரஸின் நோக்கமான மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்துதான் ஆகவேண்டும் என்று தைர்யமாகத் தீர்மானித்திருக்கும் பம்பாய் சர்க்காருக்கு நான் ஆசிகூறுகிறேன். ஒத்துழையாமை இயக்ககாலம் முதல் இன்றுவரையில் மதுவிலக்கு கொண்டுவர வேண்டும் என்பது காங்கிரஸின் நோக்கமாக இருந்தது. காங்கிரஸ் வாக்குறுதிகளில் அதுவும் ஒன்றாக இருந்து வந்தது. மந்திரிகள் மகாநாடு கூடின போதெல்லாம் இதைப்பற்றிய விவாதம் நடந்தது. காரியக்கமிட்டி ஒரு தைர்யத்தைக் கொடுத்து வழிகாட்டிற்று. மதுவிலக்குத் திட்டத்தை சீக்கிரமே கொண்டுவரவேண்டும் என்று கூறிற்று. ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் சிறைவாசம் கூட செய்தார்கள்

* * *

மதுவிலக்கு அமுலுக்குக் கொண்டுவரும் முறைக்கு ஒரு சிலருடைய அபிப்ராயபேதம் இருந்தாலும், இந்த பரிசோதனைத் திட்டம் வெற்றிகரமாக முடியும் என்று நான் நம்புகிறேன்.

—பண்டிட் ஜவஹர்லால்நேரு.

## பர்மா அரிசி

பர்மாவில் ஏராளமாக ஏற்றுமதியாக்க அரிசி இருப்பதால், அத்தேசம் உலகசராசரி விலையையும் வாங்கும் தேசங்களின் விலைவாசியையும் அண்டி நிற்கிறது. அதனால்தான் அதன் நிலைமை மோசமாக இருக்கிறது. அதனால்தான் வாடிக்கையாக தன் சரக்கை வாங்கும் தேசங்கள் என்னவிலை சொல்கின்றனவோ, அதே விலையில் அது தன் சரக்கை விற்பனை செய்கிறது. ஆனால் பிரிவு ஏற்பட்ட பிறகு ஏன் இந்தியா பர்மாவைப் பற்றி கவலைப்படவேண்டும்? ஒரு நாளைக்கு 300 டன் வீதம் நெல்லு குத்தும் பெரிய பெரிய இயந்திரசாலைகள் எல்லாம் பிரிடிஷாருக்குச் சொந்தமாக இருக்கின்றன. ஆகையால் அவர்கள் சரக்குக்கு செலவு ஏற்படுத்தவேண்டும். எனவே, பர்மாவிலுள்ள பிரிட்டிஷார்கள் நஷ்டமடையக்கூடாது என்கிற எண்ணத்தினால்தான், இந்திய மார்க்கெட் பர்மா அரிசிக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

அதனால்தான், தன் விவசாயத் தொழிலைப் பாதிக்கும் அந்த பர்மா அரிசி ஏற்றுமதிக்கு கட்டணம்கூடவிதிக்க அனுமதி இல்லாமலிருக்கிறது இந்தியா.

—கவுரவக் காரியதரிசி

பெங்கால் ரைஸ்மில்ஸ் அண்டு மர்ச்சேண்ட்ஸ் அஸோஸியேஷன்

## ஐந்து அம்சங்கள்.

ஒரு சமஸ்தானம் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அல்லது எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அச் சமஸ்தானத்தில் ஜனங்களுக்கு குறைந்த பக்ஷம் கீழ்க்கண்ட உரிமைகளை அளிக்கவேண்டும்:—

(1) நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பலாத்காரத்தைத் தூண்டாமலிருக்கும் அளவிற்கு பிரஜைகளுக்கு சுயேச்சை அளிக்க வேண்டும். இவ்வுரிமை பத்திரிகைகளுக்கும் அடங்கி இருக்கிறது. பலாத்கார முறையை போதிக்காத எந்த பத்திரிகையையும் ஜனங்கள் வாங்கி வாசிக்க உரிமை இருக்கவேண்டும்.

(2) சமஸ்தான பிரஜா சங்கம் அமைத்து ஜனங்களுக்குப் பொறுப்பாட்சி அடைய நல்வழி போதிக்க சமஸ்தான ஜனங்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.

(3) ஒரு குறிப்பிட்ட சமஸ்தானத்துக்கு வெளியிலிருப்பவரும் இந்தியாவின் எல்லைக்குள்ளிருப்பவருமான எவரும் அவருடைய நடவடிக்கைகள் சமஸ்தானத்தைக் கவிழ்க்கும் படியானதாக இல்லாதிருக்கும் வரையில், ஒருவிதமான தடையுமில்லாமல், அச் சமஸ்தானத்தில் நுழைய உரிமை இருக்கவேண்டும்.

(4) சமஸ்தானாதிபதிகளின் சொந்த செலவுக்காக எடுத்துக் கொள்ளப்படும் பணம் ஒரு அளவுக்குட்பட்டதாக இருக்கவேண்டும். சமஸ்தானத்தின் வருஷ வருமானம் 10 அல்லது 15-லக்ஷத்துக்கு மேற்படாமலிருந்தால் சமஸ்தானாதிபதியின் சொந்த செலவு பத்தில் ஒரு பாகத்துக்கு மேல் போகக்கூடாது. வருமானம் எவ்வளவாக இருந்தாலும் சொந்த செலவுகளுக்காக 3 லக்ஷத்துக்குமேல் கொடுக்கவே கூடாது—அரண்மனைச் செலவு, மோட்டார்கள், குதிரைகள், விருந்தினர்கள், முதலிய சகல செலவுகளும் இதற்குள்தான். பொதுச் செலவுகளாயிருந்தால் அவற்றை ஸ்பஷ்டமாகக் குறிப்பிட்டுவிடவேண்டும்.

(5) சுதந்திரமானதும், நிரந்தரமானதுமான நீதி இலாகா ஒன்று இருக்க வேண்டும். பக்ஷபாதமில்லாமல் ஒரே விதமான நியாயம் வழங்கப்படுவதற்கு சமஸ்தானம் எந்த மாகாணத்

தின் எல்லைக்குள் இருக்கிறதோ அம்மாகாணத்து உயர்தர நியாயஸ்தலத்தில் அப்பீல் செய்துகொள்ள உரிமை இருக்க வேண்டும்.

பொறுப்பாட்சியைப்பற்றி நான் ஒன்றும் எழுதவில்லை. இது ஒவ்வொரு சமஸ்தானத்திலுள்ள ஸ்திதியைப் பொறுத்திருக்கிறது. எந்த சமஸ்தானத்தில் பொது ஜன அபிப்பிராயம் அதைக் கோருகிறதோ, அங்கு அந்த அதிபதி அதற்கு இணங்கி நடக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

—காந்திஜி.

## ஹிட்லரின் விளையாட்டு

இன்னும் சில வாரங்களில், சென்ற செப்டம்பரில் என்ன செய்தாரோ அதைப் போல் ஹிட்லர் செய்ய ஆரம்பிப்பார் என்று தெரிகிறது. ஆனால் இந்த வருஷம் அவருடைய பலம் அதிகமாக இருக்கும். ஜெர்மன் போலிஷ் எல்லைப்புறத்தில் 1,200,000 போர் வீரர்களும், அதே எண்ணிக்கையுள்ள வீரர்கள் டச்சு பெல்ஜியம் எல்லைப்புறப் பிரதேசங்களிலும் அமர்த்தப்படுவார்கள்.

* * *

தலைவர் ரூஸ்வெல்ட்டின் செய்திக்கு முன்னமேயே போடப்பட்ட ஹிட்லர் ஆக்கிரமண திட்டப்படி, அச்சுச்காரர்கள் ஒரே சமயத்தில் ஐரோப்பாவில் பல விடங்களை எதிர்ப்பதற்கு முன் பிரிட்டிஷ், பிரெஞ்சு போர்ப்படையை கிழக்கே இழுத்துவிடவேண்டும் என்பது தான்.

போலந்தைப் பிரிப்பதிலும், கீழ்க்கோடியிலுள்ள பிரான்கோ—பிரிட்டிஷ் கௌரவத்தை இழக்கும்படி செய்வதிலும், மத்திய தரைக்கடலின் நிலைமையை மாற்றுவதிலும், ஹிட்லர் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பது எங்கும் தெரிந்த விஷயம்.

"எஃகு உடன்படிக்கை" செய்து முடித்த பிறகுதான் பிரான்சு, ரோம்பெர்லின் ஏற்பாட்டை—சண்டைக்காலத்திலும் சமரஸமாக இருக்கும் காலத்திலும் இத்தாலியின் ராணுவம் ஜெர்மன் ராணுவத்துக்குக் கீழ்ப்படிந்தே இருக்கும்படி செய்த ஏற்பாடு—தெரிந்து கொண்டது.

* * *

லண்டனில் வந்த செய்திப்படி ஹிட்லர் இவ்வருஷம் மேலும் ஆறு கோரிக்கைகளை வெளியிடுவார் எனத் தெரிகிறது.

அவையாவன:—

(1) டான்ஸிக்கை ஜெர்மனியில் சேர்ப்பது.

(2) மத்திய ஐரோப்பாவிலும் பால்கன் பிரதேசத்திலும் சகலவிதமான பற்றுகளையும் பிரிட்டன் விட்டு விடுவது.

(8) ஜிப்ரால்டர் ஸ்பெயினுக்குத் திரும்பி வருவது.

(4) இத்தாலிக்கு அனுகூலமாக ஜிபூடியின் நிலைமை மாறுவது.

(5) சூயஸ் கால்வாயின் ஆதினம் மாறுவது.

(6) ஜெர்மனியின் குடியேற்ற நாடுகளைப் பற்றிய கோரிக்கைகளைக் கவனிப்பது.

—மேடம் டேபூ

## சுபாஷ் போஸின் ஜாதகம்

| | | | |
|---|---|---|---|
| | | குஜ | |
| சு | உத்திர நட்சத்திரம் | | ல / கே |
| சூ ரா | இராசி 23-1-1897 | | குரு |
| பு | சனி | | சந் |

குரு மகாதசை கேது புக்தி

—நவசக்தி

சென்னை பிராட்வே டாக்கீஸிற்கு வருகிறது.

ஈஸ்ட் இந்தியா பிலிம் கம்பெனியாரின்

# வரவிக்கிரயம்




டைரக்டர்: C. புல்லய்யா

ஆந்திர தேசம் முழுதும் வெற்றி முரசு வீசுகிறது

உங்களூருக்கு வரும் நன்னாளை எதிர்பாருங்கள்

## சமேரியா டாக்கி டிஸ்ட்ரிபூடர்ஸ்

20, வேப்பேரி ஹைரோட் : : சென்னை.